
# தொண்டன்

புரட்டாதி
1987



## கிறித்தவ இலக்கியத் திங்களேடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

புரட்டாதி — 1987
மலர்: 19 இதழ்: 8

★

ஆசிரியர் :
சி. பி. இராஜேந்திரம்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
பீ. ஜோசப்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
ஆயரகம்,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
BISHOP's HOUSE,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 3/25
ஆண்டுச் சந்தா ரூபா 35/-

## உள்ளே..

| | | |
|---|---|---|
| 1. | இதயத்திலிருந்து | — 1 |
| 2. | திருச்செபமாலை நற்செய்தி | — 2 |
| 3. | மரியாளின் ஆண்டுபற்றி | — 5 |
| 4. | செய்தி முரசு | — 7 |
| 5. | பெங்களூரில் பதினொரு | — 9 |
| 6. | சொந்தம் எப்போதும் | — 11 |
| 7. | இளைஞர் அரங்கம் | — 14 |
| 8. | நூல் விமர்சனம் | — 17 |
| 9. | எதிரொலி | — 19 |
| 10. | திருமண ஆயத்த | — 21 |
| 11. | குறுக்கெழுத்துப் போட்டி | — 27 |

எழுத்தாளர்களே! மார்கழித்திங்கள் தொண்டன் கிறிஸ்து பிறப்பு விழாச் சிறப்பிதழாக மலரும். ஆக்கங்களை அனுப்புவோர் ஐப்பசித் திங்கள் 30ம் நாளுக்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கென நீதியை விதையுங்கள்.
அன்பை அறுவடை செய்யுங்கள்.
ஏசே. 11/12.




# இதயத்திலிருந்து...

இலங்கை — இந்திய உடன்படிக்கை பற்றி காரசாரமான விமர்சனங்கள் நடந்துகொண்டிருக்கும் நேரமிது. ஆனுல் சமாதானம் வேண்டும், நீதியான தீர்வு வேண்டும் என்பதில் யாருக்கும் இருகருத்து இல்லை.

சமாதானம் நிலைத்துநின்று பயனளிக்க வேண்டுமென்ருல் சமாதானத்தைக் குலைத்துவிட்ட குறைகளெல்லாம் — போக்குகளெல்லாம் மறையவேண்டும்.

உடன்படிக்கை கைச்சாத்தாகிவிட்டதால் குறைகள் ஒழிந்துவிடாது சமாதானம் வந்துவிடாது. உடன்படிக்கை சமாதானத்தையிட்டு அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க ஓர் ஆரம்பம் மட்டுமே. அனைவரும் இதயசுத்தியோடு, நீதியுணர்வோடு, சமாதான வேட்கையோடு ஒன்றுபட்டு உழைத்தாலே சமாதானத்தைக் காண இயலும். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி ஒரவஞ்சனையோடு நடந்துகொண்டால் உடன்படிக்கையால் பயனேதும் இல்லை. சமாதானம் நெடுந்தொலைவு சென்றுவிடும்.

விடுதலைக்காக தமதுயிரையும் துச்சமாக மதித்துப் போராடிய இளைஞர்கள் இனிவரும் காலத்தில்தான் இன்னும் அதிக அவதானத்துடனும், ஆர்வத்துடனும், விழிப்புணர்வுடனும் உழைக்க அதை வளர்க்க முன்வரவேண்டும். உரிமைப் போராட்டத்தால் உருக்குலைந்திருக்கும் தமிழ்ச் சமுதாயத்தை மீண்டும் புதுப்பொலிவோடு கட்டி எழுப்பப் பாடுபட வேண்டும்.

— சி. பி. இராஜேந்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்செபமாலை நற்செய்திக்கு விரோதமானதா

ஆனந்தா A. G. இராஜேந்திரம்

இந்தக் கேள்வி இன்று முன்னெப்போதுமில்லாத வகையில் விசுவரூபம் எடுத்து கத்தோலிக்க மக்களின் விசுவாசத்தை குழப்பிக் கொண்டிருக்கிறது என்பது மறுக்கமுடியாத உண்மை! தம்மை உதாரண கத்தோலிக்கராகக் காட்டிக்கொண்டு, இன்று திருச்சபையின் புதிய அலையாக இருந்துவரும் அருங்கொடை இயக்கத்தின் முன்னணி உறுப்பினர்களாகக் காண்பித்துக்கொண்டு, வேதாகமத்தைக் கரங்களில் இறுகப்பிடித்தபடி தமது வாழ்வின் ஒவ்வொரு விநாடியில் பேச்சும், மூச்சும், சிந்தனையும், செயலும் கிறீஸ்துவின் வார்த்தைகளேயன்றி வேறொன்றுமில்லை என்ற வேடத்துடன் வாழ்ந்துவரும் எமது கத்தோலிக்கரே இந்தக் கேள்விக்குக் காரணமாயமைகின்றனர். இது மாதிரியான மனிதரின் நடவடிக்கைகளே இந்த ஆக்கத்தை எழுதும்படி என்னைத் தூண்டின. அவர்களுக்கு என் நன்றி! இந்தச் செபமாலைப் பக்தியின் தாற்பரியத்தை என்னால் ஓரளவாவது புரிந்துகொள்ளவும், அதை உங்களோடு பகிர்ந்துகொள்ளவும் வழிசமைத்த அவர்கள் நிச்சயம் எனது நன்றிக்குரியவர்களே.

இவ்வாறான மனிதர்கள் இன்று சாதாரண இல்லறவாசிகளுச்குத் தமது எண்ணங்களையும் போதனைகளையும் கொடுக்கின்ற முன்னணி நிலையில் இருந்துகொண்டிருக்கும் ஆபத்து தொடர்ந்து கொண்டிருக்கிறது. திருச்செபமாலை ஓதப்படும் இடங்களைவிட்டு சிலுவையைக்கண்ட பேய்போல் ஓடுவதும், அவ்வாறான செபமாலைப் பக்தி வழிபாடுகளில் கலந்து கொள்ளாமல் இருப்பதுவும், எதிர்பாராதபடி செபமாலை ஓதப்படும் இடங்களில் அகப்பட்டுக்கொண்டால் இறுக வாய் மூடிக்கொள்வதும் இப்படிப்பட்டவர்களின் அடையாளங்களாக இருக்கிறது. இவர்கள் தம் உரைகளாலும். செயல்மாதிரிகளாலும் இல்லற விசுவாசிகளின் மனதைக் குழப்ப அடித்துக்கொண்டிருக்கும் நிலை இனிமேலும் தொடரவிடக் கூடாது என்பது எனது இந்த ஆக்கத்தின் ஒரு நோக்கமாகும்.

மேலும், திடீரென தாம் நடந்துவந்த பாதையில் இருந்தம் பிறழ்ந்து போய்க்கொண்டிருக்கும் இவர்களைச் சிந்திக்கப்பண்ணித் தம் பாதையைச் செப்பனிட்டுக்கொள்ள ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பதும், நமது அன்றாடங் காய்ச்சிகளான பொதுநிலையினர் தமது பாதையில் உறுதியாய் இருக்கச் செய்வதுவும் இன்னும் இரு நோக்கங்களாகும்.

முதலில் தேவ அன்னை — கன்னிமரியாள் என்கிற தத்துவத்தை நாம் புரிந்துகொள்ள எமக்குத் தூய ஆவியின் அருள்வேண்டும். இது பற்றி விளக்கமாக எனது இத்தொடரின் இரண்டாவது ஆக்கத்தில் ஆராயவுள்ளேன். எனவே அதுவரை நமது இந்த திருச்செபமாலை பக்தி தொடர்பான கருத்துக்களை இங்கு ஆராய்வது போதுமானது.

அகஸ்தினாரின் அரிய சிந்தனையால் விவிலிய செபப் பக்தியாக திருச்செபமாலை உருவாகியது.

அந்த 53 மணிச் செபத்திலே அடங்கிக் கிடக்கின்றவைகள் நற்செய்திக்கும், கத்தோலிக்க திருச்சபைக்கும் விரோதமானவைகளா? இல்லவே இல்லை.

இந்த திருச்செபமாலையை ஓத ஆரம்பிக்கும்போது நாம் எமது பாவங்களுக்காக மனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருந்தி இறைவனிடம் மன்னிப்புக் கேட்கின்றோம். இச்செபமாலையை நாம் ஓதி இறைவனுக்கு ஒப்புக்கொடுக்குமுன், திருப்பலியில் நாளும் ஆரம்பத்தில் எவ்வாறு இறைவனிடம் மன்னிப்பைக்கோரி எம்மைத் தூய்மை செய்து கொள்ள முயல்கிறோமோ அதேவிதமாக உத்தம மனஸ்தாபச் செபத்தின் வாயிலாக எமது பாவத்தை அறிக்கையிட்டு, இறைவனின் சந்நிதானத்திலே நம்மைத் தூய்மைப்படுத்த முயல்கிறோம் எங்கே என் நாமத்தின் நிமித்தம் இருவர் மூவர் ஒன்று கூடுகிறார்களோ, அவர்கள் மத்தியில் நான் இருப்பேன்' என்கிற இறையேசுவின் வார்த்தைகளில் விசுவாசம் வைத்து, அவரது பிரசன்னத்தை எம் உள்ளத்தில் உணரும்படி உள்ளத்தைத் தூய்மைப் படுத்திக் கொள்கிறோம். — இது நற்செய்திக்கு விரோதமானதா?

பிறகு சொல்லப்போகும் திருச்செபமாலையை உரிய பயபக்தியுடன் பராக்குகள் ஏதுமின்றி அர்த்தமுள்ளதாக ஒப்புக்கொடுக்க தூய ஆவியினதும், இறைவனதும் உதவியை நாடிச் செபிக்கிறோம் — இது நற்செய்திக்கு விரோதமானதா?

இவ்வேளையில் எமது விசுவாசத்தையும் அறிக்கையிடுகிறோம். மீண்டும் மீண்டும் எமது இறைவனில் நாம் கொண்டுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கையை வெளிப்படுத்துகிறோம். — இது நற்செய்திக்கு விரோதமானதா?

இதையடுத்து திருச்செபமாலைப் பக்தி முயற்சியில் ஆழமாக இறங்குகிறோம். அந்த முயற்சியில் ஆரம்பச் செபத்தை எப்படி ஆரம்பிக்கிறோம்? 'பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே' என்றல்லவா தொடங்குகிறோம் நற்செய்தி ஏடுகளிலுள்ள கர்த்தர் கற்பித்த செபம் நற்செய்திக்கு விரோதமானதாக முடியுமா?

இதைத் தொடர்ந்து மரியாளுக்கும் தமதிரித்துவத்திற்குமுள்ள தொடர்பை நான் நினைவிற் கொண்டுவந்து அதன்மூலம் எம் வாழ்வின் இறைபக்தி, பிறர் அன்பு முயற்சிகள் எல்லாம் உருவாக உதவி வேண்டுகிறோம்.

தமதிரித்துவத்தின் முதல் இறைவன் பிதாவிற்கு மரியாள் எம் அன்னைவர் போலவும் மகளாக அமைகின்றாள். அதேவேளை சம ஏக கடவுளின் இரண்டாம் தத்துவமான யேசுவின் அன்னையாக இருக்கின்றாள் அந்த திருச்சுதனைக் கருத்தாங்கக் காரணமான எல்லமையுள்ள தூய ஆவிக்கு அவள் பத்தினியாக இருக்கிறாள். இம் மூன்று தத்துவங்களும் விவிலியத்தின் அடிப்படைக் கூறுகளே. இவை நற்செய்திக்கு முரண்பட்டவை என்று எவராவது கூறமுடியுமா?

இந்த உண்மைகளை நினைவுகூரும் ஒவ்வொரு சமயத்திலும் ஓர் அருள் நிறை மரியே என்கிற மந்திரம்கூறி மூன்று மணிகளை முடிக்கிறோம். மீதியுள்ள ஐம்பது மணிகளையும் ஐந்து நோக்கங்களுக்காகத் — தேவைக்காக ஒப்புக் கொடுக்கிறோம்.

நோக்கங்களுக்காக மன்றாடும் வேளைகளில் நற்செய்தியிலே கிறிஸ்து, மரியாள் இவர்களது வாழ்வில் காணப்பட்ட மகிழ்ச்சியான, துக்ககரமான கட்டங்களை நினைவில் மீட்டுத் தியானிக்கின்றோம் அந்தத் தியானங்களின் வழியாக எமது வாழ்வின் அனுபவங்களை ஒப்பிட்டு நோக்கி நம்குறைகளைத், தேவைகளை வாழ்ந்து அனுபவித்த அந்த தெய்வங்கள் நன்கு உணர்ந்துள்ளன என்ற நம்பிக்கையின் விளைவாக அவர்களிடம் அருள்கேட்டு, உதவிகேட்டு எங்கள் செபங்களை ஆரம்பிக்கும்போது நாம் நற்செய்தியையே தியானிக்கிறோமேயல்லாது வேறொன்றுமல்ல.

இது தவிர ஒவ்வொரு காரணிக்கங்களையும் ஆரம்பிக்கும் போது நமக்கு இறையேசு கற்றுக்கொடுத்த கர்த்தர் கற்பித்த 'பரலோகத்திலிருக்கிற எங்கள் தந்தையே' என்ற செபத்துடனே ஆரம்பிக்கிறோம். அதைத்தொடர்ந்து 'அருள்நிறை மரியே' என்று ஒவ்வொரு காரணிக்கத்திலும் பத்துத் தடவைகள் என்று ஐம்பது முறை திரும்பத் திரும்ப கூறுகிறோம்.

இந்த 'அருள்நிறைந்த மரியாயே' மந்திரம் யார் உண்டாக்கிய வசனங்களை உள்ளடக்கியது? மரியாளா? இல்லை சாதாரண மனிதனா? இல்லை அந்த அப்பாவிச் சிறுமி வேர்ணதேத்தின் கண்டுபிடிப்பா?

இந்த அருள்நிறை மரியே செபம் ஒன்றும் மனிதனின் கற்பனையில் உண்டான செபமல்ல. அதன் ஒரு வரியைத்தவிர ஏனையவை அனைத்தும். சுமார் 86% மான வசனங்கள் நற்செய்தியிலிருந்தே எடுக்கப்பட்டவை!

கபிரியேல் தூதனின் மங்களச் செய்தியுரை அதன் முதல் பாகமாகிறது. அவர் சொன்னார் 'அருள்நிறைமரியே வாழ்க. கர்த்தர் உம்முடனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவரே' என்கிறார்.

இரண்டாம் பகுதி 'அர்ச்சியஷ்ட மரியாளே' என்று அருள்நிறைந்த ஆசீர்வதிக்கப்பட்ட அந்தப் புனிதமான பெண்ணை அழைத்து 'சருவேசுரனுடைய மாதாவே' என்கிறோம் இது முழுக்க முழுக்க எலிசபெத்தம்மாளால் தூய ஆவியின் ஏவுதலால் உரைக்கப்பட்ட வார்த்தைகள். அவள் கூறுகிறாள் 'இதோ என் ஆண்டவரின் தாய் ..' என்று. இதுவும் விவிலியத்து வார்த்தைகளே. இவற்றைச் சொல்லி அவளை வாழ்த்தி, பாவிகளாக நாம் இருக்கிறோம். இப்போதைய வேளையில் மட்டுமல்ல எப்போதும், எனது இறுதிமூச்சை விடும் வேளையிலும் எங்களுக்காக உமது மகனை மன்றாடும் என்ற எமது பணிவுள்ள மன்றாட்டுடன் எமது செபத்தை முடிக்கிறோம். இப்படியாக முழுச் செபமாலையிலும் 53 தடவைகள் நற்செய்தி வாசகங்களை நினைவுகூர்ந்து, இறை யேசுவின் நற்செய்தியிலுள்ள வார்த்தைகளே எமது செபமாக மாற்றியமைக்கிறோம். சுமார் ஆறு தடவைகள் கர்த்தர் கற்பித்த செபத்தை வார்த்தைக்கு வார்த்தை முதலிடம் கொடுத்து உச்சரிக்கிறோம்.

இந்த முறையில் திரும்பத் திரும்ப ஒரே செபத்தை மீண்டும் மீண்டும் சொல்வது மந்திர உச்சாடனம் என்னும் முறையாகும். இந்து சமயம், இஸ்லாமிய மார்க்கம், பௌத்த மதம் என்று எதிலும் இந்த ஒரே செபத்தைத் திரும்பத்திரும்பக் கூறும் முறை உண்டு. இதனுல் ஆன்மீக சக்தியும், வலிமையும் பெருகுவதாகவும் — இறை சந்நிதானத்தை இந்த செபங்கள் உசுப்பிவிடுவதாகவும் ஒரு கருதுகோள். இதுபோன்று இசையோடு கூடிய மந்திர உச்சாடனமே பஜனை வழிபாடும். இசையாலும், சொல்லாலும் இறைவனின் பிரசன்னத்தை உணர முற்படல் — இதனுல் தமை மறந்த பரவச நிலையொன்று ஏற்படுகின்றமை ஓர் உண்மை.

எனவே இப்படிப்பட்ட ஒரு செப முறையை நாம் திருச்செபமாலை வேளையிலும் கடைப்பிடிக்கிறோம். மேலும் ஒவ்வொரு காரணிக்கமும் முடிய ஏகதிரித்தவத்தை ஆராதித்து 'பிதா, சுதன், தூய ஆவிக்கு...' என்று போற்றவும் செய்வதுடன் அதைத் தொடர்ந்து மீண்டும் எங்கள் பாவங்களை மன்னிக்கும்படிக்கும், நரகத்தின் கொடுமைகளினின்று எம்மைத் தப்புவிக்கும் படிக்கும் சகல ஆன்மாக்களையும் (சிதறுண்டு விடாமல்) வான்வீட்டுப் பாதையில் வழிநடத்தும்படியாகவும், அவரது அருள்வேண்டி நிற்போருக்கு அதை நிறைவாக வழங்குமாறு பிறர் சிந்தையுடனும் மன்றாடுகின்றோம்.

இவ்வாறாக, அன்னை மரியாள் மூலம் கற்பிக்கப்பட்டு, நாளாந்தம் ஓதப்பட்டுவரும் இந்த திருச்செபமாலையானது முற்றிலும் விவிலியத்தின் அடிப்படையிலானது என்பதை இனியாவது குறை கூறுபவர்கள் உணர்ந்துகொண்டு தமது தவறை நிவர்த்திக்க முயற்சி செய்யவேண்டும். உண்மை இறை அருளுடன் நற்செய்தியை உயர்வாகப் பேசி போதிப்பவர்கள், நிச்சயமாக திருச்செபமாலையைக் குறைகூறமாட்டார்கள். அப்படிக் குறைகூறுபவர்கள் தூய ஆவியின் கொடைகளைப் பெற்றிராதவர்களாகவே இருப்பார்கள். ஏனெனில், பரிசுத்த சின்னப்பர் கூறுவதுபோல கிறீஸ்து யேசுவை தமது ஆண்டவர் என்று கூற தூய ஆவியின் அருள் வேண்டும். அதுபோல மரியாள் ஆண்டவனின் தாய் என்று கூறவும் தூய ஆவியின் தூண்டுதல் தேவை (இது தொடர்பாக விரிவாக அடுத்த ஆக்கத்தில் ஆராயலாம்) எனவே தூய ஆவியின் உண்மையான அருள் வரம் இல்லாதவர்களால் யேசுவின் வார்த்தைகளாலும், நற்செய்தியின் வார்த்தைகளாலும், கிறீஸ்து உருவாக்கிய கத்தோலிக்க திருச்சபையின் படிப்பினைகளால் உருவான செபங்களாலும் உருவாக்கப்பட்ட திருச்செபமாலையை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

வேறு வார்த்தைகளில் கூறுவதானால் தூய ஆவியின் அருளில்லாதவர்களால் திருச்செபமாலையை ஏற்றுக்கொள்ளவே முடியாது. எனவேதான் குறிப்பான முறையில் அருங்கொடை இயக்கத்திலிருந்து கொண்டு, திருச்செபமாலையை ஓத மறுத்து, ஏற்க மறுத்து, அதற்கு விரோதமாகப் போதிப்பவர்கள் மட்டில் பொது நிலையினர் விழிப்புடனிருந்து அவர்களது தவறான போதனைகளில் வீழ்ந்துவிடாமல் இருக்கவும், அவர்கள் தமது விபரீதமான போக்கினை மாற்றி அமைக்கவும் இறை அருள்வேண்டி திருச்செபமாலை ஒப்புக்கொடுக்க வேண்டும்.

ஏனெனில் தூய ஆவி நற்செய்தியிலுள்ள வார்த்தைகளுக்கு எதிரானவரேயல்ல. அவருடைய வழிகாட்டுதலே அதன் ஒவ்வொரு எழுத்தையும் எழுதத் தூண்டியது. எனவே அவரே அதற்கு விரோதமாக உரைக்கமாட்டார். அதே வார்த்தைகளே திருச்செபமாலையை முழுக்க முழுக்க நிரப்பியுள்ளதால் இவர் அதற்கு விரோதமாகப் பேசும் வரத்தைக் கொடுக்கவே மாட்டார். எனவே, அப்படிப் பேசும்படி பிறரைத் தூண்டுவது தூய ஆவியல்ல: நிச்சயம் அசுத்த ஆவிகளின் ஏவுதலாகவே இருக்கும். அவைதான் கிறீஸ்துவின் நற்செய்திக்கு விரோதமானவை.

திருச்செபமாலை நற்செய்திக்கு விரோதமானதல்ல - மாறாக அது நற்செய்திச் செபம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரியாளின் ஆண்டுபற்றிய மேய்ப்புப்பணித் திருமுகம் - 1987

திருமலை — மட்டுநகர் மறைமாநிலம்

இறை அருளினாலும் அப்போஸ்தலிக்க ஆட்சிபீடத்தின் தயவினாலும்
திருமலை — மட்டுநகர் மறைமாநில ஆயர்

# ஜே. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

ஆகிய நாம்

# நம் மறைமாநிலத்தில் உள்ள சகல இறை மக்களுக்கும் இறைவனின் ஆசிரும் அருளும் இறைஞ்சி எழுதுவது:

கிறிஸ்துவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே, துறவறத்தாரே, இறைமக்களே,

திருத்தந்தையினால் பிரகடனப்படுத்தப்பட்ட மரியாளின் ஆண்டு பரிசுத்த ஆவியின் ஞாயிறு ஜூன் 7, 1987 — ஆகஸ்ட் 15 1988 சம்பந்தமான இலங்கை கத்தோலிக்க ஆயர்களின் திருமுகம், என்னுடைய திருமுகம் இவற்றின் தொடர்ச்சியாக சில முக்கிய விடயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவருவது எனது பணியெனக் கருதுகிறேன்.

"மீட்பரின் தாய்" என்ற திருத்தந்தையின் சிறப்புத் திருமுகத்தில் குறிப்பிட்டுள்ளதைப்போன்று மரியாளின் ஆண்டின் செயல்நோக்கம் திருச்சபை இயல், கிறிஸ்து இயல் ஆகிய இரு அடிப்படைக் கூறுகளில் அடங்கியுள்ளது. அதாவது எமது மீட்பராம் இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் இரண்டாயிரம் ஆண்டு நிறைவினைக் கொண்டாடுமுகமாக திருச்சபையையும் அதன் வழியாக உலகினையும் முன்னேற்பாடு செய்வதற்கேயாகும். ஆகவே திருச்சபையிலும் உலகிலும் ஆழமான விசுவாசத்தை மேம்படுத்த நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

தூய கன்னிமரியாள், தான் பெற்றுள்ள இறையருள் பரிந்து வேண்டும் தாய்க்குரிய தனிப் பேற்றினால் பயணம் செய்யும் திருச்சபையின் வழிப் பயணத்திலே அதன் வழிகாட்டியாகவும், முன்னோடியாகவும் துலங்குவது மரியாளின் ஆண்டின் தனித்துவமாக மிளிர்கின்றது. எமது துணையும், நம்பிக்கையும், அடையாளமும் அவளே. தூய கன்னிமரியாளின் பிறப்பு கிறிஸ்துவின் பிறப்பை முந்தியதாயிருப்பதைப் போன்று மரியாளின் ஆண்டும் கிறிஸ்து பிறப்பின் இரண்டாயிரம் ஆண்டு நிறைவு விழாவுக்கு முந்தியதாய் அமைகின்றது.

இந்த ஆண்டை மரியாளின் ஆண்டாகப் பிரகடனப்படுத்துவதன்மூலம் அருட்தந்தையரிடமும் இறைமக்களிடமும் பின்வரும் விருப்பங்களை ஊக்குவிக்க விழைகின்றார்.

1. கிறிஸ்துவினதும், திருச்சபையினதும் மீட்பு மறைபொருளில் மரியாளின் பங்கையும் அவளது பணியையும் பற்றிய அறிவாற்றலை ஆழமாக்குவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. அவள்மட்டில் உண்மையான பக்தியைப் பேணி வளர்ப்பது.

தூய கன்னிமரியாள் பற்றிய மறையுண்மையின் அறிவாற்றலைப் பெருக்கப் பின்வரும் நடைமுறை ஒழுங்குகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

(அ) மரியாளோடு தனிப்பட்ட தொடர்புடைய பரிசுத்த வேதாகமத்தின் பகுதிகளைக் கற்றல். கன்னிமரியாள் பற்றிய வேறுபல திருச்சபை ஏடுகளைக் கற்றல்.

(ஆ) திருவிழாக் காலங்களிலும் சிறப்பாக யாத்திரைகளின்போதும் தனிப்பட்ட மறையுரைகள், மறைக்கல்விப் போதனைகள் நிகழ்த்துதல்.

(இ) கரத்தரங்குகள், சிறப்பு கல்வி வளர வகுப்புகள் நடாத்துதல்.
தூய கன்னிமரியாள் மட்டில் உண்மையான பக்தியை வளர்ச்சியுறச் செய்யவும், மேம்படுத்தவும் பின்வரும் நடைமுறை ஒழுங்குகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

அ. மரியாள் பக்தியாக் திரிகாலச் செபம் சொல்லுதல்.

ஆ. அனுதின குடும்ப செபமாலை — குடும்பங்கள் தனித்தும் பல குடும்பங்கள் ஒன்றிணைந்தும்.

இ. தூய கன்னிமரியாளின் பிரார்த்தனையைச் சொல்லுதல்.

ஈ. மரியாளின் வணக்கமாதங்களை (வைகாசி, ஐப்பசி) அனுசரித்தல்.

உ. ஒவ்வொரு சனிக்கிழமையையும் சிறப்பாக மாதத்தின் முதல் சனிக்கிழமையையும் கடைப்பிடித்தல்.

ஊ. தூய கன்னிமரியாளின் திருவிழாக்களை அர்த்தமுடன் கொண்டாடுவதுடன் மரியாளின் தலங்களுக்குச் செல்லும் யாத்திரைகளில் ஆர்வமுடன் பங்குபற்றுதல்.

சாதாரண சூழ்நிலைகளில் மரியாளின் திருத்தலங்களுக்குத் திருயாத்திரை செல்பவர்களுக்குத் திருத்தந்தை பரிபூரண பலன் கிடைக்கக்கூடிய சலுகையளித்துள்ளார். எமது திருமலை — மட்டுநகர் மறைமாநிலத்திலும் மரியாளின் ஆண்டு காலத்தில் பின்வரும் ஆலயங்களைத் தரிசித்துப் பரிபூரண பலனை அடைந்துகொள்ளலாம் :-

1. தூய மரியாள் பேராலயம் — திருமலை
2. லூர்து அன்னை ஆலயம் — பாலையூற்று
3. தூய மரியன்னை இணைப் பேராலயம் — மட்டக்களப்பு.
4. சதா சகாய அன்னை ஆலயம் — ஆயித்தியமலை.
5. லூர்த்து அன்னை ஆலயம் — நாவற்குடா.
6. ஆரோக்கிய அன்னை ஆலயம் — அக்கரைப்பற்று.
7. பாத்திமா அன்னை ஆலயம் — இக்கினியாக்கலை.

மக்களை மரியாள் வழியாகக் கிறிஸ்துவிடமும் திருச்சபையிடமும் மீண்டும் அழைத்து வரவும், அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தவும் மரியாளின் ஆண்டு மிக அத்தியாவசியமானது என்றால் மிகையாகாது. கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்களின் விசுவாச வாழ்வைப் புதுப்பிக்க இது வழிவகுக்கும்.

18ம் நூற்றாண்டில் புனித லூயிஸ் கிறிக்னன் தெமொன்ட்பட் செய்ததுபோன்று ''மரியாள் ஊடாக இயேசுவிடம்'' பக்தியை மேம்படுத்துவோம். மரியாள் வழியாக எம் மக்களிடையே நிலையான சமாதானத்தைக் கட்டியெழுப்புவோம்.

இறை ஆசீர் எப்பொழுதும் உங்களுடன் இருப்பதாக.

+ Kingsley Swampillai

திருமலை - மட்டுநகர் மறைமாநில ஆயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்தி முரசு

## மறை மாவட்ட மறைக்கல்வி நடுநிலையச் செய்திகள்

மறை மாவட்டத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டு இன்று பங்குகள் தோறும் பரவலாகப் பணியினை மேற்கொண்டு வரும் குழு வாழ்வுச் சகோதரிகளின் ஒன்று கூடுதல் நிகழ்ச்சி கடந்த 28 - 7 - 87 முதல் 31 - 7 - 87 வரை நடைபெற்றது. அவ்வமைப்பின் காரண கர்த்தாவான அருட்திரு. டி. சாமிநாதன் ரோமாபுரியில் இருந்து விடுமுறையில் வந்துள்ள இந்நாட்களில் அவரே இதை ஏற்பாடு செய்தார். சுமார் 21 சகோதரிகள் ஒன்று கூடி தமது பணியினைப் பற்றி அலசி ஆராய்ந்து இன்னும் தம்மை ஆழப்படுத்திக் கொண்டார்கள். இந்நாட்களில் அவர்களை நமது இன்றைய ஆயர் வந். ஜே. கே. சுவாம்பிள்ளையுடன் முன்னாள் ஆயர் எல். ஆர். அன்ரனி அவர்களும் சந்தித்து ஊக்கப்படுத்தியமை சிறப்புக்குரியது.

- குழு வாழ்வு அமைப்பின் ஆரம்ப வழிகாட்டியாக விளங்கிய அருட்செல்வி லொறீலியா அ. கா. அவர்களின் மாற்றத்தைத் தொடர்ந்து புதிய வழிகாட்டியாக அருட்செல்வி. ரில்டா அ. கா. அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். புதிய பயிற்சியாளர்களாக ஒன்பது பேர் பயிற்சி பெறுகிறார்கள்.

- அண்மைக்கால கொக்கட்டிச்சோலை கலவரத்தால் இடம் பெயர்ந்து நாவற்குடாவில் பணி புரிந்த குழு வாழ்வுச் சகோதரிகள் நாட்டின் அமைதிநிலை காரணமாக மீண்டும் கொக்கட்டிச்சோலையில் பணி தொடங்கியுள்ளார்கள்.

- 22 ஆண்டுகளுக்குப் பின் மறை மாவட்ட பீடப் பணியாளர்கள் மகாநாடு இம்மாதம் 23 - 8 - 87 முதல் 26 - 8 - 87 வரை புனித சூசையப்பர் குருமடத்தில் நடைபெற்றது. சுமார் 500 பீடப் பணியாளர்கள் பங்கு பெற நடு நிலையம் சகல ஆயுத்தங்களையும் மேற் கொண்டது. இதில் மட்டக்களப்பு, கல்முனை மறைக்கோட்டங்களே இடம் பெற்றன. திருமலை மறைக்கோட்டத்திற்கான தனியான மகாநாடு ஒன்றும் நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. 22 ஆண்டுகளுக்கு முன் அருட்தந்தை பீற்றர் துரைரெத்னத்தின் தலைமையில் மறை மாவட்ட முன்னோடிப் போதகரான கே. யேசுராசா அவர்களின் துணையுடன் மகாநாடு நடைபெற்றது குறிப்பிடத் தக்கது.

- தேசிய ரீதியிலான வினாவிடைப் போட்டிகள் மறை மாநில ரீதியில் நடாத்தப் பட்டு பரிசில்கள் பாராட்டுக்கள் அளிக்கப்பட்டன. வெற்றியீட்டிய குழுக்கள் இறுதிப்போட்டிக்காக கொழும்பு சென்றுள்ளார்கள்.

- மரியாயின் ஆண்டை முன்னிட்டு நடு நிலையம் 1987 ஆவணி 15ல் அன்னைக்கு நம்மை அர்ப்பணிக்க ஓர் செபவெளியீட்டை வெளியிட்டது. அன்னையின் புகழ் பரப்ப 'அவள் ஒரு கேள்விக்குறி' என்ற தலைப்பில் ஒரு சிறு நூலையும் வெளியிட உள்ளது. விரைவில் உங்கள் கரங்களில் தவழ இருக்கும் இந்நூலை எதிர்பாருங்கள்.

— தகவல்:- கே. யேசுராசா —



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு விழா

செக்கடித்தெரு புனித அன்னம்மாள் பங்கிலுள்ள நல்மரண மாதா சபையின் ஆண்டு விழாவை புனித வேளாங்கண்ணி நடுநிலையத்தில் 23 - 8 - 87 அன்று மாலை 3-45 மணியளவில் பங்குதந்தை வண. பிதா ஒகஸ்டின் அவர்கள் குத்துவிளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். சபையின் வெள்ளி உலாவின் போது போட்டிகளில் பங்குபற்றி வெற்றி கொண்டோருக்கு பங்குதந்தை பரிசில்களை வழங்கினார் இவ்விழாவுக்கு அழைக்கப்பட்ட மற்ற அலகுகளிலிருந்து வருகை தந்தவர்களோடு சுமார் 150ற்கு மேற்பட்டோர் பங்குபற்றி சிறப்பித்தனர். சிற்றுண்டிகள் வழங்கப்பட்டதும் சபைத் தலைவரின் நன்றி உரையுடன் இவ்விழா மாலை 5-00 மணியளவில் கலைந்தது.

தகவல்:- P. J. M.
821/1, செக்கடித் தெரு,
கொழும்பு - 13.

## ஆலய விழா

இரட்சகர்புரம் இரட்சகர் ஆலயத்திருவிழா கடந்த 13 - 07 - 87ல் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நாள்தோறும் அருட்தந்தையர்கள் திருவுரை ஆற்றினார்கள். முழு வாழ்வுச் சகோதரிகளும் அருட்சகோதரிகளும் மறை ஆசிரியரும் பங்கு கொண்டு குடும்பங்களைச் சந்தித்து ஞான ஆலோசனை வழங்கினார்கள். இறுதிநாளில் அருட்தந்தை தேவதாசன் பங்கு கொண்டு திருவிழா திருப்பலி நிறைவேற்றி வைத்தார்கள்.

பல திருமணங்கள் ஆலயத்தில் நிறைவேற்றி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தகவல்:- J. L. இம்மனுவல்

## பிரதிநிதி விஜயம்

பாப்பாண்டவரின் பிரதிநிதி மேதகு அம்புரோஸ் பவுளி ஆண்டகை அவர்கள் 09-08-87 அன்று திருக்கோணமலைக்கு விஜயம் செய்தார். ஆண்டகையை வரவேற்கு முகமாக திருமலை புனித மரியாள் பேராலயப் பங்கு மேய்ப்புப்பணிச் சபையினர் பங்குத் தந்தை அருட்திரு நோபட் ஒக்கஸ் அடிகளாரின் தலைமையில் வரவேற்பு நிகழ்ச்சி ஒன்றினை ஒழுங்கு செய்திருந்தனர்.

ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டதன் காரணமாக வெளியரங்க கலைநிகழ்ச்சிகள் ரத்துச் செய்யப்பட்டு மிக அடக்கமாக நடைபெற்றன.

புனித மரியாள் கல்லூரி மாணவிகளின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் ஊர்வலமாக பிரதிநிதி ஆண்டகை அழைத்துச் செல்லப்பட்டு பேராலயத்தில் கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இத்திருப்பலியில் எமது மறைமாநில ஆயர் மேதகு கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும் பங்கு கொண்டார்.

பங்கு மக்கள் சார்பில் திருமதி ரெஜினா சண்முகநாதன் அவர்கள் பிரதிநிதி ஆண்டகை அவர்களை வரவேற்று சிற்றுரை நிகழ்த்தினார். திருப்பலியின் பின்னர் பங்குத்தந்தை அவர்களால் சிற்றுண்டி விருந்து அளிக்கப்பட்டது பங்கு மக்கள் அனைவரும் பங்கு கொண்டனர்.

## அன்னையின் திருச்சுருப பவனி

திருமலை புனித மரியாள் பேராலயப் பெருவிழா ஆவணி 6 இலிருந்து 15 வரை நடைபெற்றது. பெருவிழாவின் மறுதினம் அன்னை பாத்திமாவின் திருச்சுரூபம் ஆலயத்தை விட்டு ஊர்வலமாக புறப்பட்டுள்ளது

அன்னையின் ஆண்டையொட்டி மேற்படி பேராலய பங்கு மேய்ப்புப் பணிச் சபையின் தீர்மானத்திற்கு இணங்க புறப்பட்ட இத் திருச்சுரூபம் பங்கிலுள்ள அனைத்து இல்லங்களுக்கும் விஜயம் செய்யவிருக்கிறது. 1988 ஆவணி 5 ஆந் திகதி வரை மாதாவின் திருச் பவனி தொடரும்.

தகவல்;

தாபி - சுப்பிரமணியம்
செயலாளர்
பங்கு மேய்ப்புப் பணிச்சபை
புனித மரியாள் பேராலயம்,
திருக்கோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெங்களூரில் பதினொரு நாட்கள்

G. B. B. சுரேந்திரா
கிழக்குப் பல்கலைக்கழகம்.

இலௌகீகத் தலைமைத்துவ கருத்தரங் கொன்றில் பங்குபற்றும் வாய்ப்பு வைகாசி 20ம் திகதி எனக்குக் கிட்டியது. முதன்முக வில் கிழக்குப் பல்கலைக்கழகத்திலிருந்து கிறிஸ் தவ ஒன்றியத்தின் சார்பாக கலந்துகொண்ட அங்கத்தவன் என்று பெருமைப்படும் வேளை யில் இதை எனக்கு ஏற்படுத்தித்தந்த பல் கலைக்கழக குரவர் வணபிதா சாந்தன் இம் மானுவேல் அடிகளையும் இளைஞர் தொடர்பு இயக்குநர் வணபிதா தேவதாசன் அடிகளையும் எனது மனம் நன்றியுடன் நினைத்துக்கொள் கிறது.

குடியகல்வு — குடிவரவு கெடுபிடிகளின் மத்தியில் சிக்கி ஒருவாறு ஏயர் லங்காவில் சென்னைக்கான டிக்கட் கிடைத்தது. மாலை 5-15 ற்கு கட்டுநாயக்காவிலிருந்து விமானம் புறப்பட்டது. விமானப் பயணம் எனக்குப் புது அனுபவம். சிறுபிள்ளை வேடிக்கை பார்ப் பதுபோல் யன்னலினூடு பார்த்துக்கொண்டி ருந்தேன். இலங்கை விமானப் பணிப்பெண் கள் அன்பாக நம்மை உபசரித்தனர். பியர் கூட குடிக்கக் கொடுத்தார்கள். சுமார் 45 நிமிடங்களின் பின் விமானமானது மீனம் பாக்கம் விமான நிலையத்தை அடைவதாக அறிவிப்பு செய்தனர். அப்போது இருள் சற் றுக் கவ்வியிருந்தது. வீடுகளும் மின்மினிப் பூச் சிகளும் தெரிவதுபோல் தெரிந்தன.

விமானத்திலிருந்து பெங்களூர் வண்டி யைப் பிடிக்க சென்னை நகரை அடைந்தேன். மவுண்ட் ரோட், மெரீனா பீச் என்பன இரவு ஒளியில் இந்திரலோகத்தில் சஞ்சரிப்பது போன்ற ஒரு பிரமை. சென்னையில் பல கில் லாடிகளின் ஏமாற்று விளையாட்டுக்களும் அவர் களிடம் சிக்கிய இலங்கை நண்பர்களின் கதை யும் எப்போதோ பார்த்த பழைய படம் போல் எனது பயத்தை அதிகரித்தது. 'சார் பெங்க ளூருக்கு வண்டி எங்கே' என்று ஒருவர் கேட்டு ஓடியது எனக்கு புதிய தெம்பை அளித்தது. அவர் போன திசையில் நானும் ஓடி ஒருவாறு திருவள்ளுவர் பேரூந்தில் பெங்களூர் போவ தற்காக ஏறி அமர்ந்தேன்.

ஆசியாவிலேயே பூக்களுக்குப் பெயர் பெற்ற இடம் பெங்களூர். இதனால்தான் அந்த நகரை பூங்கா நகரம் என்கின்றனர். அங்கி ருந்து நான் கருத்தரங்கு நடைபெற்ற இடத்தை அறிய ஒரு இந்துத் தலைவர் வழி காட்டினார். அவ்விடம் N. B. C. L. C. என அழைக்கப்படுகிறது. பெங்களூரில் சிவாஜி நகருக்கருகில் காணப்படும் இது இந்தியாவி லேயே உள்ள ஒரேயொரு கத்தோலிக்க தேசிய நிலையமாகும்.



ஆரம்பத்தில் கடலை எண்ணையில் தயா ரித்த பதார்த்தங்கள் வயிற்றில் போர் நடத் தியபோதும் ஓரிரு நாட்களில் இசைவாக்க மாகிவிட்டது. சப்பாத்தி, பூரி, ரசை, பட் டாணி, மசாலா ஒன்றையும் நான் விட்டு வைக்கவில்லை. நான் சென்றநேரம் எங்கும் மாம்பழமும் பலாப்பழமுமாக இருந்தது. ஆனால் நமது நாட்டு மாம்பழங்களின் சுவையை எட்டமுடியாதன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரங்கிற்கு என்னைப்போல் ஏறத்தாள 180 பேர் வந்திருந்தனர். அநேகர் பம்பாய் நகரைச் சேர்ந்தவர்கள். இவர்கள் மேலைத் தேய நாகரிகத்தில் பற்றுடையவர்கள். கோவா, கல்கத்தா, தமிழ்நாடு போன்ற மாநிலங்களிலுமிருந்தும், பங்காளதேஷிலுமிருந்தும் வந்திருந்தனர். ஆங்கில மொழிமூலம் நடைபெற்ற இக்கருத்தரங்கில் கிறிஸ்தவத்திலும், மக்கள் மத்தியிலும் தலைமையத்துவம் (Leader Ship), கலாச்சார ஒருங்கிணைவு (In Cultura-tion), கிறிஸ்தவ அன்பு (Christian Love) பெண்களின் பங்கு, குடும்பக்கட்டுப்பாடும் கிறிஸ்தவமும் ஆகிய தலைப்புகளில் ஆழமாக ஆராயப்பட்டது.

N. B. C. L. C. இல் அமைந்துள்ள 'சச்சிதானந்தா' ஆலயத்தில் பஜனை, ஆராத்தி போன்ற தமிழ்க் கலாச்சார முறைகளுடன் நடைபெற்ற வழிபாடுகள், செபங்கள் ஆகியன நாம் இந்தியக் கத்தோலிக்கர்கள் என்ற உணர்வினை ஏற்படுத்தியது. வழிபாட்டு முறைகள் இறைவனை முழு மனதுடன் போற்றி வழிபட உதவியது. நமது அயலார் மத்தியில் இவ்வாறான வழிபாடுகளைச் செய்கையில் நம்மைப் பற்றிய தப்பபிப்பிராயம் நீங்கவும், எமது மதத்தைப்பற்றி மேலும் அறிந்துகொள்ள உதவுமென நான் நம்புகிறேன்.

கருத்தரங்கின் இடையே வந்த ஞாயிற்றுக்கிழமையன்று ஒரு மாறுதலுக்காக மைசூர் சுற்றுலா ஒழுங்குசெய்யப்பட்டது. இது எனது வாழ்க்கையில் ஒரு மறக்கமுடியாத அனுபவமாகும். மைசூரில் மகாராஜா அரண்மனை, திப்பு சுல்தான் கல்லறை, அஞ்சலி ஆஸ்ரமம், சாமுண்டீஸ்வரி மலை நந்தி, குதிரைப் பந்தயம் என்பனவற்றுடன் பிருந்தாவனம் பூங்காவில் அமைந்துள்ள இசைக்கேற்ப நீரின் நடனமும் மறக்கமுடியாதன.

பெங்களூரிலுள்ள விவேக் நகரில் அமைந்துள்ள குழந்தை யேசு ஆலயத்தைப் பார்க்க வேண்டும் என்ற நெடுநாளைய ஆவலும் இந்தப் பயணத்தில் நிறைவேறியது. ஒவ்வொரு வியாழனும் அங்கு கூடும் பக்தர்களின் எண்ணிக்கையே அற்புதக் குழந்தை யேசுவின் மகிமையை பறைசாற்றியது. 'எவ்வளவுக்கு என்னை நீ மகிமைப்படுத்துகின்றாயோ அதற்கு மேலாக உன்னை ஆசீர்வதிப்பேன்' என்ற குழந்தை யேசுவின் மொழி ஆலயத்தின் எப்பகுதியிலும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. பெங்களூரில் அமைந்துள்ள 'லால் பூங்கா' மிகவும் அழகானது. அங்கு சென்றிருந்த வேளையில் தமிழக திரைப்பட நடிகர்கள் சிலர் படப்பிடிப்புக்காக வந்திருந்தனர். காதலர்கள் இந்தியாவின் எல்லாப் பகுதியிலிருந்தும் இங்கு பொழுதுபோக்கிற்காக வருவது வழக்கம்.

கருத்தரங்கு 30ம் திகதி முடிவுறும் தருவாயில் இன்னும் பல நாட்கள் நீடிக்காதா என்று மனம் ஆதங்கப்பட்டது. குறுகிய நாட்கள் பழகினாலும் எனது இந்திய நண்பர்களை என்னால் மறக்கமுடியாது. நமது நாட்டில் தற்போதுள்ள நிலையை விசாரித்து ஆறுதல் வார்த்தை கூறிய அன்பு நெஞ்சங்களை பிரிய மனமின்றி அங்கிருந்து திருச்சி நோக்கிப் புறப்பட்டேன்.

திருச்சியில் குருமார் கல்வி பயிலும் Paul Seminary இல் 3 நாட்கள் தங்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இலங்கையிலுள்ள சில நண்பர்களையும் அங்கு நான் சந்தித்தேன். அவர்கள் எனக்கு சகல வழிகளிலும் உதவி செய்தனர்.

திருச்சியில் உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கன் போன்ற இந்துக் கோயில்களுடன் தஞ்சாவூர் பெரிய கோவிலையும் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. கலையின் பொக்கிஷங்களான அவை தமிழரின் கலையார்வத்தை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

திருச்சியிலிருந்து வேளாங்கண்ணி மாதா கோயிலுக்குப் பயணமானேன். அங்கு அன்னையின் புதுமைகளை எடுத்துரைக்கும் பொருட்காட்சிச்சாலை, அன்னை காட்சி தந்த தாமரைக் குளம், புதிய திருத்தலம், சிலுவைப்பாதை என்பன மனதில் பக்தியை ஏற்படுத்தியது. மனதில் இந்த இனிய எண்ணங்களை தேக்கி வைத்துக்கொண்டு இந்திய மண்ணைவிட்டு பிரிய மனமின்றி நமது நாட்டை நோக்கி விரைகின்றேன். எனினும் எனது எண்ணம் என்னைஅறியாமல் அங்குள்ள சில இடங்களில் சஞ்சரிப்பது எனது மனத்தின் ஒரு மூலையில் வேதனையை ஏற்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அத்தியாயம் 20

**சொந்தம் எப்போதும்**
**தொடர்கதை தான்**
**முடிவே இல்லாதது**

— **கண்ணதாசன்** —

சித்திரா, மகள் பெரியபிள்ளையாகிவிட்ட செய்தியை முதன்முதலாக ஓடிவந்து மூத்ததமையன் ஆனந்தனிடம் சொல்லி, ஆகவேண்டிய பணிவிடைகளை நீங்களும், ஜெயந்தி மச்சாளும் தான் கவனிக்க வேண்டும்; என்றாள்.

ஆனந்தன் கண்களில் நீர்மல்க தங்கையைப் பார்த்தான்!

''சித்திரா இந்த நல்லசெய்தியை உனக்கு முன்னால் நம்ம 'சின்னவனே வந்து என்னிடம் சொன்னான். பழைய ஆனந்தண்ணனாக நான் இருந்திருந்தால் என் மருமகளின் சிறப்பை ஓடியாடி எவ்வளவு விமரிசையாக நான் கொண்டாடியிருப்பேன் தெரியுமா! என்ன செய்வது கால்கை ஏலாது! என்றாலும் ராமுவும், நம்ம சின்னவனும் இருக்கவே இருக்கிறார்கள்! எப்படியாவது மஞ்சள் நீராட்டு விழாவை வெகு தடபுடலாகவே செய்யவேணும்!''

இதை ஆனந்தன் சொன்னபோது

''என்னண்ணே இது பெரிய காரியமா! ஸ்பீக்கர், மேளம் பாட்டுக் கச்சேரிச் செலவெல்லாம் என்ர பொறுப்பில விடுங்க! என்றான் சின்னவன்.

''என்ன! மூன்றும் உன்பொறுப்பா! பெரிய செலவாகுமே!'' என்று ஆனந்தன் கேட்க சின்னவன் சொன்னான்.'' என்னண்ணே பெரிய செலவு! ஸ்பீக்கர மட்டும் முதல்ல எடுப்பன், பிறகு மேளம் பாட்டுக்கச்சேரியெல்லாம் 'ரேப்'பில இருக்குத்தானே! போட்டாச்சரி!''

இதைக்கேட்டு எல்லோருமே சிரித்தார்கள். ''சின்னவன் இருந்தால் எந்தக் கவலையுமே தெரியாது!'' என்று சொல்லிவிட்டு சித்திரா ஆனந்தனைப் பார்த்துச் சொன்னாள்.

''அண்ண, பிள்ளட சாமத்தியக் கலியாணத்த பெரிசாச் செய்ய எனக்கு விருப்பமில்ல! அவருக்கும் விருப்பமில்ல! கண்ணில கண்ட தண்ணிய வாத்துப்போட்டு அவடத்த ஒண்டிரண்டு அயலுகளுக்குச் சொல்லி விசயத்த முடிக்கலாமென்டு யோசிச்சிருக்கம்!''

இதைக் கேட்டதும் ஆனந்தன் சீறினான்!

''என்ன சொல்லுறா சித்திரா! முதன் முதல் கண்ட மூத்த பிள்ளெளுவா! அதோட நம்மட குடும்பத்துக்குள்ள வந்த நல்லகாரியம் இதச்சிறப்பாச் செய்யாம வேறெதச் செய்யிறதாம்! சும்மா விசர்கதையள உட்டுப்போட்டு சாமத்தியக் கலியாணத்த வெகு தடபுடலாச் செய்ய வேண்டிய காரியத்தில ஈடுபடுங்க!''

''உங்களுக்கும் ஏலாம இருக்கக்க நாங்க எப்படியண்ண...!''

'என்னப்பத்தியோசிக்கவேணும்! நீ போ' போய், ஆகவேண்டியதக் கவனி!''

ஆனந்தனின் கருத்துக்கு ஜெயந்தி, ராமு, சின்னவன் எல்லோருமே ஒத்தூதினார்கள், சித்திரா மகிழ்ச்சியோடு அங்கிருந்து சென்றாள்.

சித்திராவின் மகள் கமலினிக்கு ஊரெல்லாம் சொல்லி நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துத் தேதிபார்த்து வெகு விமரிசையாகவே சாமத்தியக் கலியாணம் நடந்தேறியது.

கமலினி பக்குவப்பட்ட பலன் சின்னவனின் வாய்ச் சொல் போல அவர்கள் குடும்பங்களில் நல்ல நல்ல முன்னேற்றங்களைக் காண்பித்தது.

ஜெயந்திக்கு ஆண்குழந்தை பிறந்ததும், ராமுவுக்கு வங்கியொன்றில் உயர்பதவி கிடைத்ததும் அதற்குச் சான்றாக அமைந்தன.

இந்த மகிழ்ச்சிச் சம்பவங்களோடு சேர்த்து சின்னவனுக்கு போட் வலைகளையும் சொந்தமாக ஆனந்தன் எழுதிக் கொடுத்து விட்டான்.

'போட் வலைகள் சின்னவனுக்குச் சொந்தமான போதிலும் அவன் உழைப்பில் அரைப் பங்கை ஆனந்தனிடமே கொடுத்து வந்தான். ராமு உழைக்கும் பணத்தையெல்லாம் ஜெயந்தி அண்ணியின்

# தொடர்கதை

கையிலேயே பொக்கிஷம் போல் கொடுத்துவிட்டு, அவன் தேவைக்காக அவளிடமிருந்தே கேட்டு வாங்கிக் கொண்டான்.

சின்னவனும் - ராமுவும் தனது வலக்கை இடக்கையாக தன்னோடு ஒட்டி வாழ்வதை எண்ணிப் பார்த்தபோது ஆனந்தனின் இதயம் குதுகலித்தது.

''இப்படியே இந்த உலகத்தில் வாழும் எல்லாக் குடும்பங்களும் பந்த பாசங்களில் கட்டுண்டு நன்மையிலும் - தீமையிலும் ஒன்று சேர்ந்து பங்கெடுத்து ஒற்றுமையாக வாழ்ந்தால் எவ்வளவு ஆனந்தமாகவிருக்கும்'' என்று தனக்குத்தானே நினைத்து தன்னை மறந்து கிடந்தான் ஆனந்தன்.

நாட்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி காலம் தொடர் கதைபோல நீண்டு கொண்டே சென்றது. அதைப் போல செல்லையாவின் அந்தச் சின்னக்குடும்பமும் இன்று கந்துகிளை விட்டு பெரிதாக வளர்ந்து அவர்களின் சொந்த பந்தங்களும் தொடர்ச்சியாக பிணைந்து செல்வதை அந்தக் கிராமமே பார்த்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

— (முற்றும்) —

## சிறுகதைப் பயிற்சி அரங்கு ஒத்திவைப்பு

இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்காக சிறுகதைப் பயிற்சி அரங்கொன்றை கடந்தமாதம் 22ஆம் நாள் நடாத்தத் திட்டமிட்டிருந்தோம். ஆயினும் போதிய விண்ணப்பங்கள் கிடைக்காமையால் பயிற்சி அரங்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


சிறுகதை எழுதுவதில் ஆர்வமுள்ள பலரிருக்கிறார்கள் — எழுதவும் செய்கிறார்கள். ஆனால் அவர்களில் பெரும்பாலானோருக்கு சிறுகதை எப்படி எழுதுவது என்று தெரியாமல் உருப்படியில்லாத கதைகளை எழுதிக் குவிக்கிறார்கள். இந்நிலையில் சிறந்த சிறுகதை எழுத்தாளர்களை உருவாக்குவிக்கவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு முழுக்க முழுக்க எமது செலவிலேயே இந்தப் பயிற்சி அரங்கை நடாத்த நாம் முயன்றும் போதிய விண்ணப்பங்கள் கிடைக்காதது வருத்தத்திற்குரியது. ஆயினும் ஆர்வமுள்ள சிறுகதை எழுத்தாளருக்காக எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 24ம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 4.30 வரை சிறுகதைப் பயிற்சி அரங்கு நடாத்தப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய இறுதிநாள் : 30 - 09 - 1987.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரைப் பற்றி நாம்...



கடந்த இருபது மாதங்களாக தொண்டனில் 'சொந்தம் எப்போதும் தொடர்கதைதான்' என்னும் நாவலை தொடர்ந்து எழுதிவந்த கவிஞர் செ. குணரெத்தினம் அவர்களுக்கு எமது நெஞ்சார்ந்த நன்றி.

இலங்கையில் பிரபலமான நாளேடுகள் சஞ்சிகைகளிலெல்லாம் ஆயிரக்கணக்கான கவிதைகளையும், சிறுகதை, நாவல், நகைச்சுவைக் கட்டுரைகளையும் எழுதிக்குவித்துள்ளதோடு வானொலியிலும் நாடகம், மெல்லிசைப்பாடல் என்று பல்வேறு ஆக்கத்தளங்களில் கால் பதித்தவர் கவிஞர் செ. கு.

ஓயாது, ஓழியாது, சலியாது எழுதிக் கொண்டிருக்குமிவர் பல பரிசுகளைத் தட்டிக் கொண்டவர்.

மண்வாசனையோடு கூடிய இவரது படைப்புக்களில் கிழக்கிலங்கை மக்களின் பேச்சு வழக்கு சுலபமாக வந்துவிழுந்து சுகந்தரும்.


''அமிர்தகழியான்,'' ''குணாளன்'' என்று புனைபெயரிலும் எழுதும். இவரது 'நெஞ்சில் ஒரு மலர்' கவிதை நூலின் வெளியிட்டு விழா கடந்த ஆகஸ்ட் திங்கள் 15ம் நாள் மட்டக்களப்பில் நடைபெற்றது.

இம் மாதம் 12ம் திகதி மட்டக்களப்பு கலாச்சாரப்பேரவை இவருக்கு 'கவிமணி' பட்டமளித்து கௌரவிக்கவிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆற்றுவெள்ளம் போன்றது உனது உள்ளத்து உணர்ச்சிகள். அணைகட்டி அவற்றைப் பயன்படுத்தி அதிசய 'அபூர்வ' ஆனந்த விளைநிலங்களை உருவாக்கலாம், வளமாக்கலாம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உடன்பாடு

❊ மக்களை மடையர்களாக்கியதும் தலைவர்கள் தான்.

❊ அவர்களை புத்திமான்களாக்க் கஷ்டப்படுவதும் தலைவர்கள்தான்.

மக்களை மடையர்களாக்குவது இலகுவான செயல். ஆனால் அவர்களை அறிவுள்ளவர்களாக, சிந்தித்து செயற்படக் கூடிய சமுதாயப் பிராணிகளாக மாற்றுவது அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பதை இலங்கை ஆட்சித் தலைவர்கள் ஆடித்திங்கள் இறுதி வாரத்தில் உணர்ந்துகொண்டார்கள்.

இந்த நாட்டு பெரும்பான்மை மக்களை அன்றிலிருந்து இன்று வரை,

— சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளாதவாறு மந்தமான பாதைக்கு திருப்பியவர்கள் யார்?

— சிறுபான்மை மக்களின் ஏக்கங்களை விளங்கொள்ளாதவாறு பகல் நாடகம் நடாத்தி வேறு பக்கம் திருப்பியவர்கள் யார்?

இலங்கை நாட்டின் ஆட்சியாளர்களே, இப்படியொரு உடன்பாடும் — அதிகாரப் பரவலும் எப்போதே நிறைவேற்றியிருந்தால் — மூன்றும் நபர் அவசியமில்லாமல் போயிருக்கும்தானே!

மூன்றும் நபர் ஏன்? என்பதுதானே இந்நாட்டு மக்களின் இன்றைய வினவும்.

யாரப்பா அதிக விளைவுகளைப் பெற்றவன்? ஊரவனு? நாட்டவனு?

இவ்வேளையிலாவது இந்த ஞானம் சில தலைக்ளுக்குள் புகுந்ததே பெரும் கெட்டித்தனம் தான் இந்த ஞானம் எப்பொழுதோ புகுந்திருந்தால் இதைவிட எவ்வளவோ நிறைவு கண்டிருக்கலாம் தானே!

இருப்பினும், பிரச்சினைகளினதும் — பிணக்குகளினதும் தீர்வுகளும் செயற்பாடு வழிமுறைகளும் அந்தக்காலத்து ஒப்பந்தங்களைப் போலல்லாது — செவ்வனே நிறைவுபடுத்தப் படுவதே அவசியம் என்பதை சிறுபான்மை மக்களும் — பல்வேறுபட்ட உந்தல் குழுக்களும் அவதானித்துக்கொண்டிருக்கின்றன.

இழப்புக்கள் இல்லையேல் மீட்பு இல்லை என நாம் முன்னர் குறிப்பிட்டோம். எமது இளைஞர்கள் — பல அப்பாவி மக்களின் உயர் இழப்புக்கள், உடமை இழப்புக்கள், கல்வி இழப்புக்கள் — ஆகியவற்றினுல் ஏதோ அடைந்துவிட்டோம் என்று கூக்குரல் இடுவதிலும் — கூடிப் பேசுவதிலும் காலத்தை வீணுக்காது உரிமைகளை நிலைநாட்ட, நீதியுடன் உழைக்க எமது ஒருங்கிணைவு இன்றும் தேவையாயுள்ளது எனக் குரல் கொடுப்பது —

— கலையுலகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ விடுதலை ஒரு கண்ணோட்டம்

ஆவணித்திங்கள் 4ஆம் நாள் அதிகாலையிலிருந்து கிழக்கு மாகாணத்தின் அக்கரைப்பற்று — கல்முனை — மட்டக்களப்பு —வாழைச்சேனை பிரதான வீதிகளெங்கும், அரச அலுவலகங்கள், பாடசாலைகள், தனியார் கடைகள், வீடுகள் அனைத்திலும் புலிக்கொடிகள் பறக்கத் தொடங்கின.

மங்களமான மஞ்சள், புரட்சிக்கே உரித்தான சிவப்புத் துணிகளில் புலிகள் பதிக்கப்பட்ட கொடிகள் காற்றில் அசைந்தாடின. என்றோ ஒருநாள் "புலிக்கொடி" பறக்கும் என்பது நிருபணமான இந்நாள் ஒரு பெரும் பொன்னாள் ஒரு புதுயுக நாள் என்பதுபோல் காலையிலிருந்து மக்கள் எல்லோரும் வீதியோரங்களில் கூடிக்குலாவினர். புரட்சிவாத தமிழ் இளைஞர்களையும் — யுவதிகளையும் வரவேற்க காத்திருந்தனர்.

அன்று காலை மட்டுநகர் பல்வேறுபட்ட ஊர்வலங்களை உணர்வுகளின் எதிரொலிகளை அனுபவித்தது என நாம் அறிகின்றோம். துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், பொதுப் பேரூந்துகள், தனியார் வாகனங்கள், லொறிகள் ஆகிய அனைத்திலும் இளைஞர்கள், அவர்களின் புரட்சிக் கருவிகளுடன் விடுதலை வேட்கை கூக்குரல்களுடன் செல்லும் காட்சி காணும் மக்களின் உடல்களையும் சிலிர்க்க வைக்கின்றன.

இளைஞர்கள் மட்டுமல்ல மிகச் சிறியவர்கள்கூட ஏதோ பெரும் விடுதலை — நாடு கிடைத்துவிட்டது போன்ற அதிகம் விளங்கிக் கொள்ளாத நிலையிலும் கூட்டத்தோடு கோஷமிட்டுச் சென்றதும் பெண்கள், வயோதிபர்கள் அனைவருமே ஒரு விடிவு — விடுதலை ஏற்பட்டுவிட்டது எனும் உணர்வுடன் — மகிழ்ச்சியில் "தமிழ் ஈழம் வாழ்க" என பதிலுக்கு குரல் கொடுக்கும்போது "மக்கள் இயக்கம்" பலமானது எனும் உறுதிப்பாடு மேலும் — மேலும் அழுத்தமாகின்றது.

ஆரம்பத்தில் இந்த ஊர்வலங்கள், வாகனங்களின் மேலும், பக்கவாட்டிலும் இளைஞர்கள் தொங்கிக்கொண்டு செல்வது ஓர் அந்தரமான சூழலை உருவாக்கினாலும், பல மக்களின், வயதினரின் மனதை — உணர்ச்சியை வெகுவாக தொட்டுவிட்டதை பலரின் நடவடிக்கைகள் — வார்த்தைகளிலிருந்து நாம் அவதானித்துக் கொண்டிருந்தோம்.

வயல்வெளிகளில் மேய்ந்துகொண்டிருந்த மாடுகளும் விழித்து — வெறித்துப் பார்த்த காட்சிகளும் உண்டு. படித்துக்கொண்டிருந்த மாணவர்களும் இதுபோல், இனி ஒருபோதும் இத்தகைய காட்சிகளைக் காணமுடியாது என எண்ணி வீதிக்கு விரைந்த நிகழ்ச்சிகளும் உண்டு.

ஒருசில இளைஞர்கள் வாகனங்களிலிருந்து விழுந்து மட்டுநகர் வைத்தியசாலைக்கும் ஏனைய சிறிய வைத்தியசாலைகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்ட சம்பவங்களும் அனுபவங்களும் உண்டு எனினும் 5ம், 6ம் திகதிகளிலும் இத்தகைய ஊர்வலங்கள் தொடர்ந்தன. பாதுகாப்பு வீரர்களுடன் விடுதலைப் புலிகள் — புரட்சிவாத மாணவர்கள் கைகுலுக்கி தமது உறவைப் புதுப்பித்துக்கொண்ட நிகழ்வுகளும் இடம் பிடித்தன என்பதும் உண்மை.

நான்கு வருடங்களாக அல்ல இலங்கையின் வரலாற்றில் நாற்பது வருடங்களாக தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளில் ஒரு ஆரம்ப விடிவு ஏற்பட்டுவிட்டது என்பதை இந்நிகழ்வுகள் உணர்த்தின.

இதேவேளையில் அண்மைக்கால உடன்பாடு கைச்சாத்திட்டமை, இந்தியத் துருப்புக்களின் வருகை, இந்தியாவின் அரசியல் வெற்றி

ஒரு சில நிமிடங்கள் நீ சற்றுக் கவனக் குறைவாக நடந்துகொண்டால், சில வருடங்கள் நீ துன்பப்பட வேண்டிய சூழ்நிலைகூட உருவாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி விமர்சிக்கும் மக்களும் ஒருமித்து இவற்றையிட்டு (FOCUS) எதிர்வு கூறியும பார்த்தனர்.

எவ்வாறெனினும் இந்திய அரசு பலத்த வெற்றியடைந்துள்ளது எனபது உலக நாடுகளின் ஏகோபித்த முடிவு என்பதை யாரும் மறக்க முடியாது.

நாம் அடைந்த வெற்றியின் — விடிவின் விகிதத்தைவிட இந்திய அரசு எம்மை — இளைஞர்களைப் பயன்படுத்தி அடைந்த வெற்றியின் விகிதாசாரம் அதிகம் என்பதை எம்மில் எத்தனை பேர் சிந்திக்கின்றனர் என்பது கேள்விக் குறியே. எமக்கு கொடுக்கப்பட்ட உறுதிகளும் உரிமைகளும் செயற்படு நிலையில் ஏற்படக்கூடிய இடர்களை எவ்வளவு தூரம் இந்தியா தவிர்க்கும் என்பதையும் நாம் அவதானிக்க வேண்டும் என்பதும் முக்கிய கனமான விடயமாகும்.

இறுதியாக ஆடித்திங்கள் 29ம் நாள் ஏற்பட்ட இலங்கை — இந்திய ஒப்பந்தம் எத்தகைய சூழ்நிலைகளால் முடுக்கிவிடப்பட்டன என்பதும் பெரும் ஆய்வுக்கும் — எதிர்வு கூறலுக்கும் உட்பட்டதாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினதும், தலைவர்களினதும் உரைகள் இவற்றையிட்டு, எளிமையான முறையில் சில கருத்துக்களைக் கொண்டிருக்கின்றன என்பதையும் நாம் சிந்தித்துப் பாாததல் வேண்டும்.

இருந்தாலும், உலக நாடுகளினது பல புரட்சிச் சூழல்களை அவதானிக்கும் போது — ஆட்சிபீடத்தைச் சற்று ஆட்டம் காண வைத்து — பேச்சுவார்த்தைகள் — உடன்பாடுகள் எனும் அடிப்படைக் கருவூலங்களுக்கு வித்திட்ட எமது இளைஞர்கள் அனைவரையும் நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது.

அறிந்தோ — அறியாமலோ
தெரிந்தோ — தெரியாமலோ

இயல்பாகவே நாம் இந்திய அரசுக்கும் — இலங்கை அரசுக்கும் இடையே எளிமையான ஆக்கிரமிப்புக்கும் — ஊடுருவலுக்கும் கருவியாக அமைந்துவிட்டோம் என்பதும் மறுக்க முடியாத அம்சமாகிவிட்டது எனவும் இச்சந்தர்ப்பத்தில் பலராலும் உணரப்பட்ட பேருண்மையாகும்.

எனவே, எமது விடிவுப் பயணத்தின் மைல் கண்டு நாம் மதிமயங்கி — தேவையற்ற நடவடிக்கைகளுக்கும், மகிழ்ச்சிகளுக்கும் இடம் கொடுக்காமல் — விடிவு நோக்கி விரையும் வேகத்தைக் குறைக்காது — உண்மை விடிவு ஏற்படும்வரை மிகுந்த அவதானத்துடன் வாழ வேண்டும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

## நான் நினைக்கின்றேன்

குழந்தைகள் அழும்போது வளர்கிறார்கள்
என மக்கள் சொல்கிறார்கள்
ஆனால் இளையவர்கள் அழுவதை நான்
கேட்கும் பொழுது என் இதய வேதனை
ஏக்கமாக மாறுகின்றது.
என்னைச் சுற்றியுள்ள மலைகள்
துக்கத்தில் மௌன விரதம் பூண்டதைப்போல்
தோன்றுகிறது.
எரிந்துபோன தானியங்களுக்கருகில் உள்ள
அக்குழந்தைகளை என்னால் மறக்க முடியவில்லை
போரின் இரத்தம் தோய்ந்த ஜுவாலைகள் அவர்களைச்
சுற்றி வளைக்கின்றது.
ஒவ்வொரு முறையும் ஒரு குழந்தை அழுவதை
நான் கேட்கும் பொழுது இந்தப் பிரபஞ்சமே
அழுவதாகத்தான் நான் நினைக்கின்றேன்.

- கைசின் குலியேவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'நெஞ்சில் ஒரு மலர்' - நூல் வெளியீட்டு விழா

நீண்ட நெடும் நாட்களுக்குப்பின் கடந்த ஆகஸ்ட் திங்கள் 15ஆம் நாள் மட்டக்களப்பில் ஓர் இலக்கிய விழா — "நெஞ்சில் ஒரு மலர்" கவிதை நூல் வெளியீட்டு விழா திரு ரீ. பாக்கியநாயகம் அவர்கள் தலைமையில் மட்டக்களப்பு மாநகர பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது மண்டபம் நிறைந்த மக்கள் திரள் (ஆரம்பத்தில் தான்) வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

பல்வேறு தலைப்புகளில் பன்னிரண்டு உரைகள் வழங்கப்பட்டன. தமக்குக் கொடுக்கப்பட்ட தலைப்புகளை மறந்து, ஓடிக்கொண்டிருந்த காலத்தையும் மறந்து பலரும் பொழிந்து தள்ளிவிட்டனர். ஆய்வுரை நிகழ்த்திய திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் அவர்கள் 'எல்லோரும் ஆய்வுரை நிகழ்த்திவிட்டதால் நான் எதை ஆய்வு செய்வது என்று தெரியவில்லை என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டது அர்த்தமுள்ள அடியாகவும் அமைந்தது. இனிமேல் இந்தப் பேச்சாளப் பெருமக்களை பேச அழைக்கும்போது தலைப்பு மட்டும் கொடுக்காது இன்னின்ன விஷயங்களை பேசுங்கள் என்று எழுதியும் கொடுத்துவிட்டால் தேவலை போலும்.

இந்த அறுவைகளைக் கொஞ்சம் குறைத்திருந்தால் ஆரம்பத்திலிருந்த கூட்டம் முடியுமட்டும் இருந்திருக்குமோ என்னவோ! ஆயினும் ஒருசிலர் அன்புமணி, திரு. சங்கரவேல் போன்றோர் காத்திரமான கருத்துக்களை நகைச்சுவையோடு சிந்தியது நெஞ்சில் நிற்கிறது.

விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரசாங்க அதிபர் திரு. அந்தோனிமுத்து அவர்கள் தமக்கே உரிய பாணியில் இரத்தினச் சுருக்கமாக உரையை முடித்துக்கொண்டார்.

நூல் வெளியீட்டாளர் என்று சொல்லப்பட்ட திரு வ. அ. இராசரெத்தினம் அவர் நின்று நிதானித்து வார்த்தை

## தேவை ஒரு தொடர்கதை!

தொண்டனில் பிரசுரிக்க தொடர்கதை ஒன்று தேவை.

- இருபது மாதங்களுக்கு பிரசுரிக்கக்கூடியவாறு இருபது அத்தியாயங்களைக் கொண்டிருக்கவேண்டும்.
- ஒவ்வொரு அத்தியாயமும் தொண்டன் இதழில் மூன்று பக்கங்களுக்கு அமையவேண்டும்.
- முதல் தடவையில் ஆறு அத்தியாயங்கள் அனுப்பப்பட வேண்டும்.
- தரம்நோக்கி ஏற்றுக்கொள்வதும் தள்ளுவதும் எமது உரிமை.
- இருபது அத்தியாயங்களும் பிரசுரமானபின் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
- எதிர்வரும் கார்த்திகைத் திங்கள் 30ஆம் நாளுக்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும்.

ஆசிரியர்;
தொண்டன்
சமூகத் தொடர்பு நிலையம்,
ஆயரகம், மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை எண்ணி எண்ணிப் பேசினுர். நூல் வெளியீட்டில் உள்ள இடைஞ்சல்களை, எழுத்தாளனுக்கு இந்நாட்டில் கொடுக்கப்படுகின்ற 'மரியாதைகளை' எல்லாம் மனப்புழுக்கத்தோடு எடுத்துச்சொன்னுர். வெளியிடப்பட்ட நூலை அச்சேற்றுவதில் தாம் பட்ட சிரமங்களை, அச்சடித்த தாள்களை மூட்டைகட்டி ஓடி ஒளித்த அவலங்களையும் கூறினுர். மொத்தத்தில் தாம் மிகவும் சிரமப்பட்டு உழைத்து வெளியிட்டதாகச் சொன்னுர்.

நூலின் ஆசிரியரான செ. குணரெத்தினம் அவர்கள் நூலைப் பதிப்பிக்க பணமின்றி தவித்ததையும், அங்குமிங்குமாகச் சேர்த்து பணம் கொடுத்ததாகவும், நூலை விற்றுத்தான் மிகுதியைக் கொடுக்கவேண்டும் என்றும் பதிலுரையில் குறிப்பிட்டார் எமக்குக் குழப்பமெல்லாம் இங்குதான். நூலின் ஆசிரியரே பணம் கொடுத்து நூலை வெளியிடும் பொழுது கூலிக்கு அச்சடித்தவர் எங்ஙனம் வெளியீட்டாளரானுர்? புரியவே இல்லை.

''கவிஞர்கள் பொதுவாக அற்ப ஆயுளிலேயே இறந்துவிடுவார்கள். நானும் அற்ப ஆயுளிலேயே இறந்துவிடுவேனே? என்ற அச்சத்தால்தான் அதற்கிடையில் எவ்வளவு எழுத முடியுமோ எழுதிவிடவேண்டும் என்று அதிகமாக எழுதத் தொடங்கினேன்.

— செ. குணரெத்தினம்

தமிழ்நாட்டில் ஓர் எழுத்தாளன் கல்கி, ஆனந்த விகடன் போன்ற இதழ்களில் நான்கு பக்கங்கள் எழுதி வாரம் ஐநூறு ரூபா சம்பாதிக்கும் வாய்ப்பு இருக்கிறது. எமது நாட்டில் எங்களுக்கு தொழில் என்று ஒன்றிருப்பதால் இதுவரை பிச்சை எடுக்காமலிருக்கிறேம்.

— வ. அ இராசரெத்தினம்

> மனிதன் அவசரக்காரன். அதனுல்தான்
> காய்களைப் பறித்து பழுக்கவைக்கிறன்.

கம்பராமாயணம் கலித்தொகை போன்றவைதான் இலக்கியங்கள் என்பதல்ல சினிமாப் பாட்டிலும் இலக்கியத் தரம் உண்டு.

நிலவு ஒரு பெண்ணுகி
உலவுகின்ற அழகோ
நீரலைகள் இடம்மாறி
நீந்துகின்ற ...

இந்தப்பாட்டில் கவிதை இல்லையா? இலக்கியத் தரமில்லையா?

— அன்புமணி

இவைகள் வெளியீட்டு விழாவில் காதில் விழுந்து கருத்தில் நின்றவை.

நெஞ்சை உறுத்திய ஒன்றையும் இங்கு சொல்ல வேண்டும்.

விழாவின் ஆரம்பத்தில் கடவுள் வாழ்த்தாக ஒலித்த பாடல் ஒரு சமயச்சார்பு கொண்டதாக இருந்தது. விழாவுக்கு இந்துக்களும், இஸ்லாமியரும், கிறித்தவரும் 'நம்மவரது நூல் வெளியீட்டு விழா — தமிழ் இலக்கிய விழா' என்ற பாசத்தோடும், ஆர்வத்தோடும் வந்திருந்தனர். ஆனல் ஒரு சமயச்சார்பு கொண்ட கடவுள் வாழ்த்துப்பாடல் ஓர் அந்நியத் தன்மையை உருவாக்கியது.

இதுபோன்ற இலக்கிய விழாக்களில் அனைவருக்கும் பொதுவான சொற்களைக் கொண்ட கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பாடுவதே சிறப்பு. அல்லது தமிழ் வாழ்த்தோடு ஆரம்பிக்கலாம். இலக்கிய விழாக்களை ஒழுங்குசெய்வோர் இதனை கவனத்திற் கொள்வார்களா?

விழாவில் பங்குபற்றிய அனைவருக்கும் பிஸ்கட்டும், குளிர்பானமும் அளித்தது குளிர்வித்தது. ஏற்பாடு செய்தவர்களைப் பாராட்டத்தான் வேண்டும்.

இறுதியாக நீண்டகால இடைவெளிக்குப்பின் நடைபெற்ற இலக்கிய விழாவென்று மகிழ்ச்சியோடு சென்றேம், ம் ... களைத்துப்போய் திரும்பினேம்.

— எம். வீ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிரொலி

# சமாதானத் தீர்வு?

இலங்கை — இந்திய சமாதான ஒப்பந்தம் இலங்கையின் தீராத இனப்பிரச்சினையைத் தீர்த்துவிட்டது என்று பேசப்படுகிறது. பல நாடுகளும் இந்த ஒப்பந்தத்தை வரவேற்றுள்ளன. இந்த ஒப்பந்தத்தைக் காட்டி இலங்கையும்.இந்தியாவும் பலத்தபிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன. பெரும்பாலும் இவை பொருளாதார நோக்கங்களை பாதுகாப்பு நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதில் சந்தேகமில்லை,

ஒப்பந்தத்தின் உடனடிப் பயனாக வடக்குக் கிழக்குப் பகுதியில் யுத்த நிறுத்தமும் ரோந்து நடவடிக்கைகளின் நிறுத்தமும் ஏற்பட்டுள்ளன. 'மினி' முகாம்கள் சிலவும் அகற்றப்பட்டுள்ளன. காதை அடைக்கும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் ஓய்ந்து மனப்பீதி அகன்றுள்ளது. இவை தமிழ் மக்களை ஓரளவு நிம்மதிப் பெருமூச்சு விடவைத்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. ஆயினும் இவ்வொப்பந்தம் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை ஈடுசெய்கிறதா? தூர நோக்கில் பாதுகாப்பானதா? தமிழ் மக்களின் தியாகங்களுக்கும், இழப்புகளுக்கும் போதுமானதா என்ற கேள்விகள் நெஞ்சைக் குடைகின்றன. இலங்கை - இந்திய இராஜதந்திரப் போரில் தமிழ் மக்கள் பகடைக்காயாக்கப்பட்டுள்ளார்களா என்ற சந்தேகமும் தோன்றி நிற்கிறது.

இனப்பிரச்சினையின் பிரதான பங்காளிகளான போராளிகள் ஒப்பந்தத்தில் ஈடுபடவில்லை. இரண்டு அரசாங்கங்கள் செய்து கொண்ட ஒப்பந்தம் இலங்கைத் தமிழர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. போராளிகளின் பிரதான அமைப்பொன்றின் தலைவனைத் தடுப்புக் காவலில் வைத்துக்கொண்டே செய்து கொண்ட ஒப்புந்தம் — அது கொண்டுவரும் சமாதானம் எமக்கு சந்தேகத்தையே தருகிறது.

தமிழ் மக்களின் நீடித்த பாதுகாப்புக்கும் - தனித்துவத்துக்கும் உதவக்கூடிய வடக்கு கிழக்கு இணைப்பு ஒப்பந்தத்தில் ஊசலாடுகிறது. இணைப்பைத் தாம் விரும்பவில்லை என்றும், அதற்கு எதிராகப் பிரச்சாரம் செய்யப் போவதாகவும் அதிபர் ஜெயவர்த்தனவே வெளிப்படையாகக் கூறியுள்ளார். தற்காலிக இணைப்பு — பொதுசன வாக்கெடுப்பு என்னும் வார்த்தைகள் உலகை ஏமாற்றும் கபடம் நிறைந்தவை என்பது இதிலிருந்து தெளிவாகிறது. வடக்கு — கிழக்கு தமிழ் மக்கள் வாழும் பாரம்பரிய பிரதேசமென ஏற்றுக்கொண்டால் தற்காலிக இணைப்பு ஏன்? பொதுசன வாக்கெடுப்பு எதற்கு? தமிழர் பிரதேசங்களில் திட்டமிட்டு பெரும்பான்மை இனத்தவரை குடியேற்றிவிட்டு பொதுசன வாக்கெடுப்பு என்றும் — மக்கள் விருப்பம் என்றும் புணுகுதடவ வேண்டாம்.

1983ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை கலவரங்களாலும், படைகளின் அடாவடித்தனங்களாலும் வடக்குக் கிழக்கில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இறந்துள்ளனர். பல்லாயிரம் பேர் நாட்டைவிட்டு வெளியேறி உள்ளனர். இதேவேளையில் கலவரங்களால் வெளியேறிய பெரும்பான்மையினத்தவர் திட்டமிட்டு அதிக அளவில் குடியமர்த்தப்படுகின்றனர். அரசு குறிப்பிட்டுள்ள ஓராண்டு இடைவெளிக்குள் இக்குடியேற்றங்கள் பலமடங்கு அதிகரிக்கப்படும் என்பதில் ஐயமில்லை. இந்நிலையில் இணைப்புக்கு பொதுசன வாக்கெடுப்பு நடத்துவது கேலிக்கூத்தாகும். வடக்குக் கிழக்கைப் பிரித்துத் துண்டாடுவதில் அரசு குறியாக இருக்கிறது. வடக்கும் — கிழக்கும் இணையவில்லை என்றால் அதுவே இலங்கையில தமிழ்மக்களின் அழிவுக்கு நிரந்தரப் பாதையாகிவிடும். மேலோட்டமான அமைதியைக் கண்டு வெடி கொளுத்தி மகிழும் மூடத்தனங்களைக் கைவிட்டு தமிழ் மக்கள் விழிப்போடும், விவேகத்தோடும் தமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சினை சர்வதேச முக்கியத்துவம் பெற்றமைக்கும், இலங்கை அரசை ஏதோ ஒரு தீர்வுக்கு இறங்கிவர நிர்ப்பந்தித்தமைக்கும் ஆயுதப் போராட்டமே காரணம் என்பது அனைவரும் அறிந்த உண்மை. அந்த ஆயுதங்களைப் பறிப்பதிலும், மீண்டும் ஆயுதப் போராட்டம், ஆயுதக் கடத்தல் ஏற்படாது தடுப்பதிலும் இலங்கை அரசு எதிர்பாராத வெற்றி கண்டுள்ளது. தமிழ் குழுக்களுக்கு ஆதரவும், உதவியும் வழங்கிய இந்தியாவைக் கொண்டே போராளிகளின் ஆயுதங்களைப் பறித்ததன் மூலம் அதிபர் ஜெயவர்த்தனா தாம் ஒரு அரசியல் சாணக்கியன் என்பதை நிரூபித்திருக்கிறார்.

இதேவேளை தமிழ்க் குழுக்கள் பெரும்பாலான ஆயுதங்களை ஒப்படைத்த பின்னும், சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் வாடும் பெரும்பாலானோர் விடுதலை செய்யப்படவில்லை. போராளிகள் ஆயுதங்களை முழுதாக ஒப்படைக்கும்வரை ஊர் காவல் படையினரிடமிருந்தும் ஆயுதங்கள் திரும்பப் பெறப்படமாட்டாது என்றும், அனைவரும் விடுதலை செய்யப்படமாட்டார்களென்றும் அரசு அறிவித்துள்ளது. ஆயுதப் பறிப்பில் அரசு காட்டிய ஆர்வமும், தீவிரமும் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசுக்கில்லை என்பதை அரசின் மந்த நடவடிக்கைகள் காட்டுகின்றன.

ஒப்பந்தத்தின் முழுமையான விபரங்கள் இன்னும் மக்கள் முன்வைக்கப்படவில்லை. மாநிலத்துக்கு கொடுக்கும அதிகாரங்கள் என்ன என்பது தெரியவில்லை ஒப்பந்தத்தில் அறிவிக்கப்பட்டவைகளும் சரிவர அமுலுக்கு வரவில்லை. இந்நிலையில் சமாதானத்தீர்வு சந்தேகத்தையே தருகிறது. அழுகின்ற குழந்தை சூப்பிச்கு அடங்குவதுபோல் சில உடனடி நிவாரணங்களைக் கண்டு நாம் மயங்கிவிடக் கூடாது. உறமீனை விட்டு சிறுமீனைப் பிடித்தே உரிமை இழந்தவர்கள் நாங்கள். இன்றுவிடும் சிறுதவறும் இந்நாட்டில் தமிழினத்தின் எதிர்காலத்தையே இல்லாமல் செய்துவிடும். எமது எதிர்காலப் பாதுகாப்பை நாமே உறுதிப்படுத்த வேண்டும்.

இலங்கை — இந்திய ஒப்பந்தம் இரண்டு அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தம். இரண்டு அரசுகளும் இதனால் நன்மை அடைந்துள்ளன. இந்தியப் படைகள் இலங்கைக்கு வந்ததன் மூலம் இந்திய அரசு தனது பிடியை உறுதிப்படுத்தியிருக்கிறது. அதேவேளை இலங்கை அரசின் பாதுகாப்புக்கும் உத்தரவாதமளித்திருக்கிறது. இந்தியப் படைகள் இங்கு வந்தது போராடித் தமிழ் ஈழம் பெற்றுத்தரவல்ல. தனது நலன்களைப் பாதுகாக்கவும், அதற்கு உதவும் வகையில் இலங்கை அரசைப் பாதுகாக்கவுமே. இந்த உண்மையை அனைவரும் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியப் படைகள் இங்கு வந்ததனால் அதீத கற்பனைகளை வளர்த்துக்கொண்டு ஆரவாரஞ் செய்தல் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதாகும்.

எப்படியோ இரண்டு அரசுகளினது பிடியில் இலங்கைத் தமிழர்கள் இன்று சிக்குண்டுள்ளனர். ஒரு பக்கம் இனவாத அரசு; மற்றொரு பக்கம் ஏகாதிபத்திய வல்லரசு. இந்த வேளையில் ஒற்றுமையையும், தீர்க்க சிந்தனையும் விழிப்புணர்வும் கொண்டு இடையறாது இயங்கினால் மட்டுமே இந்நாட்டில் தமிழினம் பிழைக்கும்.

— மலர்வேந்தன்.

## அன்னை வேளாங்கன்னி புனித ஆரோக்கியமாதா

## வருடாந்த திருவிழா

செக்கடித் தெரு — கொழும்பு-13.

### 13 புரட்டாதி 1987

*புரட்டாதி 4ம் திகதி வெள்ளிக்கிழமை:*

மாலை 6-15 மணிககு கொடியேற்றம்

தினமும் நவநாள் ஆராதனை

மாலை 6-15 மணிக்கு ஆரம்பமாகும்.

*புரட்டாதி 12ம் திகதி சனிக்கிழமை:*

காலை 7 00 மணிக்கு பூசை

மாலை 7-00மணிக்கு மாலை ஆராதனை

*புரட்டாதி 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை;*

புனித ஆரோக்கிய மாதாவின்

ஆடம்பர திருவிழா

திருப்பலி பூசைகள்

| | | | |
|---|---|---|---|
| காலை: | 5-00 | மணிக்கு | தமிழ் |
| காலை: | 6-00 | மணிக்கு | தமிழ் |
| காலை: | 7-30 | மணிக்கு | பாடற் பூசை |
| காலை: | 9-30 | மணிக்கு | சிங்களம் |
| பகல்: | 12-30 | மணிக்கு | ஆங்கிலம் |
| மாலை: | 4-00 | மணிக்கு | ஆங்கிலம் |
| மாலை: | 4-45 | மணிக்கு | சிங்களம் |
| மாலை: | 5-15 | மணிக்கு | திருச்சுரூபப் பவனி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை - மட்டுநகர் மறைமாவட்ட

# திருமண ஆயத்த சேவைகள்

## ஓராண்டு நிறைவு

குடும்பம் ஒரு குட்டித் திருச்சபை என்ற பரிசுத்த தந்தையின் விருப்புக்கேற்ப எமது மறைமாவட்டத்தில் ஆயரின் அனுசரணையுடன் அருட்திரு. பயஸ் பத்மராஜா தலைவராகவும் போதகர் கே. யேசுராசா செயலாளராகவும் இருக்க சிறந்தவொரு நிருவாக சபையின் துணையுடன் இச் சேவையகம் இயங்கி வருகிறது. பொது நிலையினரின் ஆணைக்குழுவின் ஓர் அங்கமாக இது தமது பணியினைத் தொடர்கின்றது.

நோக்கம்:
1. பங்குகள் தோறும் திருமண வயதெய்திய ஆண், பெண் இருபாலருக்கும் பயிற்சி வகுப்புக்களை நடாத்துதல்.
2. மாதமொருமுறை ஒரு நாளில் காலை 9 - 00 மணி முதல் 12-00 மணி வரை சிறப்புக் கருத்தரங்குகளை நடாத்துதல். இதன் தற்போதைய இடம் மட், சாள்ஸ் மண்டபம்.
3. தொடர்ச்சியாக மூன்று கருத்தரங்குகளில் பங்கு பற்றியோருக்கு சான்றிதழ்கள் வழங்குதல். இச்சான்றிதள்கள் திருமண காலத்தில் பயனளிக்கும்.
4. திருமணமாகி 5 ஆண்டுகளுக்குட்பட்ட குடும்பங்களை ஒன்று கூட்டி திருச்சபை விரும்பும் இயற்கைக் குடும்பக் கட்டுபாடு என்ற பூரண விளக்கமளித்தல்.
5. நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டு செல்லும் பொருளாதார ஒழுக்கப் பிரச்சனையால் அலைக்களிக்கப்படும் குடும்பங்களை சிறு சேமிப்பு சிக்கன வாழ்வுக்கு வழி நடத்தல்.
6. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பதன் பொருள் விளங்க அனுபவமுள்ள சிறந்த வைத்தியர்களின் சுகாதார ஆலோசனை வழங்குதல்.

### குடும்பங்களில் நிலவும் உறவுகள் புதுப்பிக்கப்பட சேவையகம் ஆற்றிய சிறப்புப் பணிகள்

1986 யூலை 13ம் நாள் சாள்ஸ் மண்டபத்தில் இளம் பெண்கள் கருத்தரங்கு.
1986 ஆகஸ்ட் 3ம் நாள் சாள்ஸ் மண்டபத்தில் இளம் பெண்கள் கருத்தரங்கு.
1986 செப்டம்பர் 28ம் நாள் சாள்ஸ் மண்டபத்தில் இளம் பெண்கள் கருத்தரங்கு, பங்கு பற்றிய 13 பேருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியும்
1986 நவம்பர் 16ம் நாள் 2ம் பகுதியினருக்கு கருத்தரங்கு.
1986 டிசம்பர் 14ம் நாள் கருத்தரங்கின் தொடர்ச்சி இடம் பெற்றது.

ஈற்றில் நிருவாக சபை உறுப்பினர்கள் ஒன்று கூடி எதிர்காலத்தில் எமது பணி பற்றி ஆராய்ந்தனர். நமது கருத்தரங்குகளையும், பயிற்சி வகுப்புக்களையும் பரவலாக்க வேண்டும். நகரைச் சார்ந்த பகுதிகளைக் காட்டிலும் சாராத பகுதிகளை நாம் பங்குத் தந்தையர் உதவியுடன் சந்திக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். இதன் அடிப்படையில் சேவையகம் இன்று வரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மன்ரேசா ஞானஒடுக்க நிலையத்தில் இளம் பெண்கள் 23 பேருக்கு ஒரு கருத்தரங்கு.
2. ஆயித்தியமலையில பொதுவான இரு கருத்தரங்குகளும்.
3. வீச்சுக்கல்முனையில 60 பேருக்கு இரு கருத்தரங்குகளும்.
4. இருதயபுரத்தில் 22 பேருக்கு இரு கருத்தரங்குகளையும் நடாத்தியுள்ளது.

எதிர்வரும் நாட்களிலும் சேவையகம் புதிய புதிய கருத்துக்களை மக்களுக்குக் கொடுத்து குடும்பங்கள் சிறப்புற குவலயம் மகிழ்வுறத் தமது பணியினைத் தொடரக் காத்திருக்கின்றது. பங்கின் பணியினை இலகுவாகக சேவையகம் தயாராக இருக்கின்றது. விரும்பியவர்கள் பங்குத் தந்தையர் மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

தொடர்பு கொள்ள:-
அருட்திரு. பயஸ் பத்மராஜா,
திருமண ஆயத்த சேவையகம்,
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.



இடமிருந்து - வலம் முன்வரிசை

1. திரு. சா. இ. கமலநாதன்
2. அருட்திரு. பயஸ் பத்மராஜா
3. திரு. கே. யேசுராசா
4. திருமதி. கமலநாதன்

இடமிருந்து - வலம் பின்வரிசை

5. செல்வி. விஜயா குரூஸ்
6. திருமதி. இராஜரெட்ணம்
7. திருமதி. ஜோசப்
8. திருமதி. அன்றியாஸ்

குடும்பம் ஒரு கோயில் அதில்
கணவன் ஒரு அகல் விளக்கு
மனைவி அதில் ஊற்றப்படும் எண்ணெய்
பிள்ளைகள் அதில் எரியும் திரிகள்.

வாழ்க உத்தம குடும்பங்கள்


வளர்க சேவையகம்
செயலாளர். கே. யேசுராசா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 45

## (தீமோத்தேயுவுக்கு எழுதிய இரண்டாம் திருமடல்)




பரிசு:

ரூபா 50/-, 25/-

முடிவுத் திகதி:

**30-09-87**

முழுப்பெயர்: ..............................................................................

முகவரி : ..............................................................................

..............................................................................

### இடமிருந்து வலம்

1) அனுப்பப்பட்டவன்

4) ஆண்டவருக்கு தன்னை இப்படியாக கையளித்து சின்னப்பர் பெருமைப் படுகின்றார்.

6) உண்மைக்குச் செவிசாய்க்காதவர்கள் இவற்றிக்குச் செவிசாய்ப்பர்.

7) பாவத்தின் வேர் குழம்பி நிற்கின்றது.

8) ஒப்புக்கொடுக்கப்படுவது தடுமாறி நிற்கின்றது.

9) சாத்தானிடம் உள்ள இந்தக் கருவியில் எல்லோரும் வீழ்வர்.

10) போகவிட்டுப் புறங்கூறுதல்

11) அவனவன் செயலுக்குக் கொடுக்கப் படுவது.

12) வாகை மலரோடு இணைந்து வருவது.

13) தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் இதனைப்பெற சின்னப்பர் துன்பத்தையும் ஏற்றுக்கொள்கின்றார்.

14) பகைமையின் ஒரு கட்டம்.

### மேலிருந்து கீழ்

1) கட்டிடத்தின் அடிப்படை.

2) நற்செய்தியைப் போதிப்பவன்.

3) இன்று இதற்குத்தான் பெருமதிப்பு.

5) இறைவனுக்காகச் செய்கின்ற வேலை.

9) சின்னப்பருக்கு எதையும் தாங்க இறைவன் அருளிய உள்ளத்தின் பண்பு.

10) வீண் பேச்சு இந்த நோய்க்கு ஒப்பிடப் படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி - 43 முடிவுகள்

**இடமிருந்து வலம்**

1. கட்டளை
2. நகர்
3. ஏத்தென்ஸ்
4. நன்றி
6. பரிசுத்தர்
7. வழிபாடு
8. தீமை
9. திமோத்தேயு
10. சுடிதம்
11. ஆவல்
12. தலைச்சீர்

**மேலிருந்து கீழ்**

1. கர்ப்பவதிகள்
2. நன்(மை)
5. பொறுமை
8. தீயவர்

## பரிசு பெறுவோர்:-

**1ம் பரிசு:**

செல்வி. எ. சகாயமலர்,
லூர்த்து அன்னை ஆலயம்,
பாலையூற்று,
திருகோணமலை.

**2ம் பரிசு:**

செல்வி. இ. மேரி இமல்டா
இல. 62, கந்தசுவாமி கோவில்வீதி,
திருகோணமலை.

2) செல்வன் இராயப்பு மிக்கேல்,
தாளங்குடா - 2,
காத்தான்குடி.

3) செல்வி. றேஸ் மேரி குருஸ்,
'றேசகம்'
ஆலய வீதி, மூதூர்.

4) செல்வன். N. அன்டன்
லூர்த்துமாதா கோவிலடி,
பாலையூற்று, திருகோணமலை.

5) செல்வன். கொட்பிறி நிமலன் ஞானேந்திரன்
10, நொத்தாரிஸ் ஒழுங்கை,
மட்டக்களப்பு.

## பாராட்டுப் பெறுவோர்:-

1) செல்வி. ரஞ்சனி ஜோசப்
இலங்கை வங்கி,
மாவட்டக் காரியாலயம்,
மட்டக்களப்பு.

பங்குபற்றியோர்:- 73

சரியான விடை அளித்தோர்:- 31

—பங்குபற்றிய அனைவருக்கும் நன்றி—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பக்கம்

## எமது பிரச்சினை

குறுக்கெழுத்துப் போட்டியைப் பொறுத்த வரை மெதடிஸ்த சபையினருக்கு அது கொஞ்சம் பிரச்சினையாக உள்ளது. சில சில எழுத்து வித்தியாசங்களால் போட்டியில் பங்குகொள்ள முடிவதில்லை. இது கத்தோலிக்க சபையினருக்கு இலகுவாயிருக்கும்.

A. தயா
கோமாரி.

(தொண்டன் கத்தோலிக்க நிறுவனத்தால் வெளியிடப்படும் சஞ்சிகை. எனவே கத்தோலிக்க திருச்சபை கையாளும் திருமறை நூலின் அடியொற்றியே போட்டிகள் தயாரிக்கப்படுகின்றன. இதில் தவறேதுமில்லை. ஆயினும் எமது பலதரப்பட்ட வாசகர்களையும் மனதிற்கொண்டு அனைவரும் பங்குபற்றக்கூடிய விதத்தில் போட்டியை அமைக்க முயற்சிப்போம்)

## இணையுங்கள்!

கேள்வி — பதில், உலகச் செய்தித் தொகுப்பும் இணைந்தால் நன்றாக இருக்கும். தொண்டனின் பணி தொடர வாழ்த்துக்கள்.

R. குணரஞ்சனி
அரியாலை.

## அறிந்துகொண்டேன்!

ஏழு மாதங்களுக்கு மேலாகத் தொண்டனில் வெளிவந்த UCIP 14 வது மகாநாடு நிகழ்ச்சித் தொடர் மூலம் பல விடயங்களை அறியமுடிந்தது. முக்கியமாக இவ்வாறான ஒரு அமைப்பு ஒன்று இருக்கின்றது என்பதைக் கூட தொண்டன் மூலமே அறியமுடிந்தது. மாநாட்டில் கலந்துகொள்வது மட்டுமன்றி வாசகர்களுக்கும் எடுத்துக்கூறிய கலையுலகன் அவர்களுக்கு எமது நன்றி!

ஜே. அருளப்பு - ஆசிரியர்
தமிழ் வித்தியாலயம்,
அம்பாறை.

'சுவைக்க சில துளிகள்' வெறும் துளிகளாக அல்லாமல் பயனுள்ள பல விடயங்களை சிந்தி வருவது பாராட்டுக்குரியதே!

A. ஸரெல்லா பாரதி
அம்பாறை.

## தவிர்க்க வேண்டும்!

மறைக்கல்வி நடுநிலையத்தில் பணிபுரிவோர் போட்டியில் பங்குபற்றுவதைத் தவிர்க்கவேண்டும்.

M. விஜயா
மூதூர்.

## ஒரு சபாஷ்!

ஆடித் தொண்டனில் அத்தனை அம்சங்களும் சிறப்பானவை. 'உயர்கல்வியில் ஊடுருவல்கள்' உள்ளதை உள்ளபடி எடுத்தியம்பிய கட்டுரையாளருக்கு ஒரு சபாஷ்!

த. ஜோய் சுதர்சன்
குருக்கள்மடம்.

## அசத்திவிட்டது!

ஆடி இதழ் கிடைத்தது. அத்தனையும் அடிவரையும் அசைத்துவிட்டன.

'இளைஞர் அரங்கம்' புதுப்பொலிவுடன் வெளிவந்தது, அதிலும் எதிரொலி என்னிலும் எதிரொலித்தது.

செல்வி K. சுகாயனி
பாலையூற்று, திருமலை.

## வாழ்த்து!

இரண்டு வருடங்களின் பின் தொண்டனைக் கண்டேன். இன்றைய எமது சமூகத்தில் நடமாடும் பிற்போக்குப் பத்திரிகைகளுடன் ஒப்பிடும்போது போற்றக்கூடிய பத்திரிகையாக பலர் மத்தியில் வலம் வருகின்றது.

யூலைத் தொண்டனில் இளைஞர் அரங்கத்தில் கலையுலகனின் முகமூடிகள் எமது சமூகத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறது.

யூஜின் அருளப்பு
யோகபுரம், மல்லாவி.

'திருமறையைத் தெரிந்துகொள்வோம்' பகுதி மூலம் பல சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டாலும் மேலும் பல சிந்தனைகளுக்கு தூண்டுகோலாகவும் அமைகின்றது.

செல்வி ஜசிந்தா குரூஸ்
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# வருகிறது இலக்கியச் சிறப்பிதழ்!

எதிர்வரும் ஐப்பசி - கார்த்திகை ஆகிய இரு மாதங்களும் இணைந்து இலக்கியச் சிறப்பிதழாக தொண்டன் பவனி வருகிறான்.

* இலங்கை - இந்திய அறிஞர்களின் கருத்தாழம் மிக்க கட்டுரைகள்.
* சிறுகதைப் போட்டி முடிவுகள்.
* இலக்கிய வரலாற்றில் வெள்ளிவிழாக் கண்ட எழுத்தாளருடன் பேட்டி
* இன்னும் கவிதை, செய்திகள், துணுக்குகள் பல பல.....
* காலந்தோறும் கவனமாக வைத்து காப்பாற்ற வேண்டிய கருத்துக் களஞ்சியம்.
* அழகிய ஆர்ட்பேப்பரில் அட்டை அதிக பக்கங்கள் ஆனால் அதே விலை பிரதி ஒன்று ரூபா 6/- மட்டுமே.
* கிழக்கிலங்கையின் கர்வமிகு சாதனையாய் வெளிவருகிறது.

மேலதிக பிரதிகளுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:

ஆசிரியர் - தொண்டன்
சமூகத் தொடர்பு நிலையம்,
ஆயரகம், மட்டக்களப்பு.

இச்சஞ்சிகை மட்டக்களப்பு, புனித செபஸ்தியார் அச்சகத்தில் அச்சிட்டு தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 01 - 09 - 1987 ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org